
# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஆவணி - 2022



# காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

ஆவணி - 2022

படைப்புக்கள் அனுப்ப :
Neythal34@gmail.com
Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

*காற்றுவெளியின் ஆவணி மாத (2022) இதழுடன் சந்திக்கிறோம்.*

*ஒவ்வொரு இதழையும் அலங்கரிக்கும் படைப்பாளர்கள் அனைவருக்கும் எமது நன்றி.படைப்புக்களை அனுப்புவோர் தரப்படும் மின்னஞ்சலுக்கு மட்டுமே அனுப்புங்கள். முகநூலின் உள்பெட்டியிலோ, வட்ஸப்பிலோ அனுப்புவதைத் தவிருங்கள். மேலும், உங்கள் படைப்புக்கள் வெறெந்த ஊடகங்களிலும் (முகநூல் உட்பட) வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். அகச்சூழல், கொறோனா, யுத்தம், சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அசாதரன சூழல் பல கனவுகளை காற்றுவெளி அச்சிதழின் வருகை தடைப்பட காரணமாகின்றன. பதிப்பகங்களினால், புத்தக சாலைகளினால் ஏற்பட்ட அனுபவம் புதிய நூல்களை வெளியிடுவதிலும் தயக்கம்,தாமதம் ஏற்படுகின்றது.. காற்றுவெளி மீள, மீள சிற்றிதழாளர்களிடம் கைகோர்க்க காத்திருப்பதை ஞாபகப்படுத்தி வருகிறோம். அதன் தொடர்ச்சியாகவே சிற்றிதழ்ச் சிறப்பிதழ்களை வெளியிட்டுமிருந்தோம். இன்னொரு சிறப்பிதழையும் வெளியிட காத்திருக்கிறோம். இருந்தும், சிற்றிதலாளர்களின் ஒத்துழைப்பு சரியாக நிகழவேயில்லை.*

*காற்றுவெளி இன்றுவரை தனிநபர் உழைப்பிலேயே தங்கியிருந்திருக்கிறது. சந்தா பற்றிக் கேட்பவர்களுக்காக ஒவ்வொரு இதழிலும் தகவல்களைப் பிரசுரிக்கிறோம்.*

*காற்றுவெளியை நீங்கள் பலப்படுத்துவதின் மூலம், ஒவ்வொரு இதழையும் அச்சிதழாகவும், காற்றுவெளியில் வெளிவந்த சிறுகதை, கவிதை, கட்டுரைகளை, மொழிபெயர்ப்புப் படைப்புக்களை தனித்தனியாக நூல்களாக்கும் திட்டங்களையும் நிறைவேற்ற உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.*

*சிறிலங்காவின் அரசியல் குழப்பம், சூழல் மாற்றம் தமிழர்களுக்காக எதுவும் செய்துவிடப் போவதில்லை. அதற்கான களச்சூழல் அகத்திலும், புறத்திலும் இருப்பதாகவும் தெரியவில்லை.*

*காற்றுவெளி அனைவருக்காகவும் பிரார்த்திக்கும்.*

தொடர்ந்து பயணிப்போம்.
நட்புடன்,
● சோபா.
*20/07/2022*

● அம்பலவன் புவனேந்திரன் (யேர்மனி)

# காலக்கடிகார முள்

முக்கால் நூற்றாண்டாய்
முடக்கிய இன்னல்கள்
காலாண்டுக் குள்ளேயே
கண்ணீரில் மிதக்கின்றதா..?

போராட்டங்கள் பட்டனிச்சாவுகள்
புரையோடிய வேதனைமுடிச்சு
வேரோடிக்கிடந்து படர்ந்த
-வேதனைத் துளியாய் கசியும்
அடக்குமுறை அத்துமீறல்
அனாதைப்பிண அடுக்குகள்
வெடிக்கும் மனிதவெம்மை
-கொதிநிலை விளங்குகிறதா..?

வீட்டின் கதவுடைத்த
~பூட்சுகளின் புழுதியோடு
நீட்டிய துப்பாக்கி துப்பிய
அலைவரிசை அபலக்குரல்
அறுந்த உயிர்க்கயிறு
இன்றெங்கு ஈவானதோ..?

எரிந்த மனை பயிர்வயல்
எமதுபள்ளி நூலகங்கள்
கரியாய் சாம்பல்மேடாய்
கண்களில் விகிறதா இப்போது.?

தப்பமுடியாத் தடைமுகாம்
அப்பிக்கிடக்கும் மரணபயம்
முள்வேலிகளுள் சிக்கி
செப்பிடமுடியா பரிதவிப்பு
சிதைந்த வாழ்வின்துயர்
செரிக்காத உணர்வாய்..

தஞ்சமடையத் தவித்தோடி
வஞ்சகர்வலையில் வீழ்ந்து
கஞ்சிக்குமின்றி காய்ந்த
காலம் காதிலுரைக்குமா..?

உணவை உரவகையை
வேலி;போட்டு மறித்து
மருந்துகளின்றிய கருச்சிதைவை
மண்மூடிப் புதைத்தவையின்று
அடுப்பெரிக்க வாயுவாக
விளக்கெரிக்க எரிபொருள்மெலிய
-விதைத்ததையே அறுவடையாக
விளக்கிடுமா கோசங்கள்..?

இருளுக்குள் தள்ளியே
இடுகாடுகளை உருவாக்கி
பொருண்மியம் கவர்ந்திட்ட
புழுதிமூட்டம் அடங்கலையே
விடிந்திடா வானத்தில்
முழங்குகிறதா எதிரொலி..

வரிசை வரிசையாய்
வதைமுகாம் முள்வேலி
வயிறுவற்றி வரண்டநாள்
ஞாபகச்சிலுவை சுமக்கிறது
தெருவெங்கும் சிதறும்
தீச்சுவாலைக் கொழுந்துகள்
விழிகளில் கக்கியதையின்றும்
உறைநிலையாய் உகுக்கும்...

● கவிஜி




# ஆசையை முறுக்கு

"எங்க வீட்ல முறுக்கு சுடறோம்" என்பது விவரம் தெரிந்த நாளில் இருந்து இன்று வரை சுவையூர செய்யும்.... மனம் மணக்க செய்யும் கிறுக்கு என்றால் நம்பலாம் தானே. எல்லா வயதுக்காரர்களையும்... இந்த முறுக்கு இறுக்கி பிடித்திருக்கிறது என்றால் கரக் முறக்கோடு சொல்லலாம்... ஆமாம் சரி என்று.

சிறு வயதில் 25 பைசாவுக்கு ஒரு முறுக்கு இருக்கும். உள்ளங்கை அளவு. கண்ணாடி ஜாடியில் போட்டு வைத்திருப்பார்கள். வாங்கியதும்...இல்லை இல்லை.. வாங்க வாங்கவே வாயில் போட்டு கடி தான். எப்போது வாங்கினாலும் அதன் முறுக்கு தன்மை கொஞ்சம் கூட குறைந்திருக்காது. பள்ளிக்கூட நாட்களில் இடைவெளியில் வெளியே வந்தால் தட்டு முறுக்கு என்று ஒரு வகை முறுக்கு இருக்கும். கிழவிகள் கூடையில் வைத்து விற்றுக் கொண்டிருப்பார்கள். 10 பைசா ஒன்று. அது ரெண்டு வாங்கி.... தின்று கொண்டே மூச்சா போவது தான் தினந்தோறும் இடைவேளை நிகழ்வு. இடைவேளை ஸ்னாக்ஸ்.

முறுக்கு தின்ற பிறகும் கையில் ஒட்டி இருக்கும் அந்த எண்ணெய் பிசுபிசுப்பு... நீண்ட நேரம் நம்மை அதன் மணத்தில் வைத்திருக்கும். முறுக்கில் சுழலும் அந்த எள் வாசம் நம்மை கூடுதலாய் அதன் வசமாக்கும். முறுக்கில் இருக்கும் வகைமைகள் நிறைய. எல்லா நிறத்திலும் கொஞ்சம் மஞ்சள் ஒட்டிக் கொண்டிருப்பது தான் அதன் கவர்ச்சிக்கு ஆடை என்று நினைக்கிறேன்.

எனக்கு எப்போதுமே எல்லா வகை முறுக்குகளை பிடித்தாலும்...அரிசி முறுக்கும்... சின்ன சின்னதாய் வட்ட வட்டமாய் மஞ்சள் வண்ணத்தில் ஒரு முறுக்கு இருக்கும். மஞ்சள் நிறம் தாண்டி ஆரஞ்சு நிறத்திலும் அது இப்போது வருகிறது. அதுவும் ரொம்பவும் பிடிக்கும். பொள்ளாச்சி பேருந்து நிலையத்தில் பேருந்தில் அமர்ந்திருக்கையில்... சாளரம் வழியே கூடையை தூக்கி காட்டுவது போலவே.... முறுக்கு... சீனி மிட்டாய்.. கடலை மிட்டாய்... என கூவிக் கொண்டே வந்தும் போயும் இருப்பார்கள். தின்பண்டங்கள் சூழ இருக்கும் கூடையில்.. அரிசி முறுக்கு மட்டும் அரசி மாதிரி சுருண்டு படுத்திருக்கும். நான் கண்களில் புறுபுறுவோடு பார்ப்பது... உடன் இருக்கும் தாத்தாவுக்கோ பாட்டிக்கோ வழக்கம்

போல தெரிந்து விடும். இரண்டு வாங்கி தருவார்கள். ஒன்றை கடித்துக் கொண்டு ஒன்றை பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பேன். பேருந்து நகர்கிறதோ என்னவோ... நான் பறந்து கொண்டிருப்பேன்.

பள்ளி நாட்களில்...கொத்து முறுக்கு ட்ரவுசர் பாக்கெட்டில் இருந்தால் கெத்து நடை போடலாம். போட்டிருக்கிறேன். ஆளுக்கொரு வட்ட முறுக்கு கொடுத்து.. என் பக்கம் இழுப்பதில்... எதிர்தரப்பு மணிராஜா கூட்டணி என்னிடம் தோற்று போகும்.

பேசிக்கொண்டே திங்க... பேச பேச திங்க... முறுக்குகளின் வழியே ஒரு வகை சுவாரஷ்யம் கண்டிருக்கிறேன். ஒரு பாக்கெட் வாங்கினாலும்... முழுக்க நொறுக்கி முடித்தால் தான் வாயும் கையும் அடங்கும். முறுக்கின் மவுசே அது தான்.

தீபாவளி போன்ற விஷேச நாட்கள்... திருமணம்.... காதுகுத்து... போன்ற நெருக்கமான நாட்கள் என்று எந்த ஒரு கொண்டாட்டமும் முறுக்கு சுடுவதில் ஆரம்பிக்கும் என்றே சொல்லலாம். இன்று வரை ஒவ்வொரு தீபாவளிக்கும் எங்கள் வீட்டில் முறுக்கு சுடுவதை ஒரு முறையாகவே வைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் பாட்டி சுடும். இப்போது கவிக்குயில் சுடுகிறது. பாட்டிக்கு நான் உதவுவேன். கவிக்குயிலுக்கு சே உதவுகிறான். பின்னிரவு வரை அது ஒரு பார்மேட்டில் நடந்து கொண்டே இருக்கும். பதமாக ஆட்டிய மாவை முறுக்கு புடிக்குள் தள்ளி....கைகளில் முழு அழுத்தம் கொடுத்து பிடியை அழுத்த அழுத்த...பிழியப்படும் மாவு சொர சொர வடிவத்தில் விழ விழவே... கையை வட்ட வட்டமாக சுழற்றி....எண்ணெய் மிதக்கும் வாணலிக்கு மேலே காற்றாய் சுழன்று... அப்பப்பா கவிதை எழுதுவதை விட கடினம்... முறுக்கு சுடுவது. முறுக்கில் இருக்கும் படிமத்தை பார்க்கையில்...சமையல் கலையின் உச்சம் என்றே சொல்லலாம். மாவு முறுக்காய் மாறும் நொடி பிரசவ வேதனை தான் கண்களுக்கு. ஆனாலும்.. பேபி பார்த்த திருப்தி எண்ணையில் மூழ்கி கலந்து... வெந்து.... நிறம் மாறி சுவை கூடி கமகமக்கும் நேரம்.

முறுக்கு சுடுகையில் உதவுவதில் இருக்கும் கர கர இன்பம் சொல்லில் அடங்காதது. சுட சுடவே எடுத்தெடுத்து வாய் நொறுக்கும் வாழ்க்கை வாத்தியம் அது.

முறுக்கின் சிறப்பே அதன் வடிவமும் இறுக்கமும் தான். மெல்ல இரு கை கொண்ட மூன்று மூன்று விரல்களால் கொஞ்சமாக பலம் கொடுத்து படக்கென்று முறிக்கையில்... சிறு சிறு துகள்கள் சிதற இரண்டாய் ஒவ்வொரு கையிலும் அரை வட்ட மொறு மொறு கோடுகள் நிகழ்த்துவது... பார்க்கவே பரவசம் தான். சில நேரம் எல்லாமே கண்ணாடி போல உடைந்து நொறுங்கி விடுதலும் நடக்கும். மெல்லிய மேலாடை உதிர்வது போல.. உள்ளங்கை பளிச்சென பதறும். பிறகு பற்கள் நொறுக்க நொறுக்க சுவைத்தல்...தின்பண்டத்தின் தனி இஸம் தான். எது திங்கையிலும் மனம் எங்கும் அலையலாம். முறுக்கு திங்கையில் மட்டும் ஓய்ந்து ஓர் ஓரத்தில் நின்று மனமும் தின்னும். வாய் சுழன்று சுழன்று ஒரு சிறு கிரைண்டரை உருவாக்கி கொள்ளும். அது ஒரு தியானம் போல திசையை வாய்க்குள் சுழற்றும். எத்தனை பெரிய கொம்பனுக்கும் வாயோரம் எண்ணெய் பிசுபிசுப்பு இருக்கும். அது தான் முறுக்கின் தனி சிறப்பு.

முறுக்கை தனியாக தின்பது ஒரு வகைமை என்றால்.. சோற்றுக்கு கடித்துக் கொள்வது இன்னொரு இனிமை. பொரியல் இல்லாத வேளையில்... முறுக்கே துணை. நொறுக்கி முடிக்கையில் சோறு முடிந்திருக்கும்.

மனதின் வேகத்தை கட்டுப்படுத்தும் வல்லமை முறுக்குகளுக்கு உண்டு என்று நானே ஒரு தியரி வைத்திருக்கிறேன். எப்போதெல்லாம்... முறுக்கு தின்கிறேனோ அப்போதெல்லாம்... ஒரு சிறுவன் வாயோரம் சுவை தேடி திரிவான். முறுக்கு தின்பது எந்த வயதுக்கும் ஆசையை முறுக்கும் விஷயம் தான். என்ன... ஆசையாய் கடிக்க வேண்டும். ஆவலாய் ருசிக்க வேண்டும். ஆனந்தம்... ஒரு பாக்கெட் முறுக்கில் இருக்கிறது. நம்பாதோர் இன்றே கடித்து தின்று பாருங்கள். நம்பியோர் ஒவ்வொரு வரியிலும் முறுக்கு வாசனையாய் ஊர்ந்து பாருங்கள்.

● ஐ.தர்மசிங், நாகர்கோவில்.

## "வாசலில்"

தலைமுடி வெள்ளையானது
சாயத்தால் மறைத்தேன்

காது மந்தமானது
கருவி மூலம் கேட்டேன்

கண்கள் இருண்டன
கண்ணாடி மூலம் பார்த்தேன்

பல் நழுவியது
செயற்கை பல்மூலம் சிரித்தேன்

கால்கள் நடுங்கின
ஊன்றுகோலை துணைக் கழைத்தேன்

நடை விடை பெற்றது
நாற்காலியில் சக்கரங்கள் பொருத்தினேன்

படுக்கையுடன் நட்பு ஆழமானது
கட்டிலால் நகர்ந்தேன்

நோய்கள் நலம் விசாரித்தன
மருந்துகளால் துரத்தினேன்

சுவாசம் தடுமாறியது
பணத்தால் சீராக்கினேன்

மருத்துவர் கை கழுவினார்
"இனி எல்லாம் கடவுள் தான்"...

ஒவ்வொரு முறையும்
ஏமாற்றி விட்டதாக
மகிழ்ந்து வந்தேன்
நான் தான்
ஏமாந்திருக்கிறேன்

அதோ வாசலில்
எனக்கான மரணம்...

● ச. ராஜ்குமார்

## தவழும் பச்சிளம் குழந்தை

மழையை பிடிக்கவில்லை..
படர்ந்து விரிந்த கிளையடியில் அமர்கிறது ..
காயம்பட்ட பறவை ...!!

வெட்டப்பட்டது சாலையோர மரங்கள்
கட்டப்பட்டது வீட்டின் துவாரத்தில்
குருவி கூடுகள் ....!!

அத்தனை பாரமில்லை
வறுமையை விடவும்
தலைமேல் சுமந்த கல் ....!!

தூரல் போடும் மேகம்
வீடு செல்லும் முனைப்பில்
பணியாட்கள் ......!!

மலையுச்சி
காய்ந்த புல் மேயும் செம்மறி
காவலுக்கு அருக்காணி ...!!

கவிழ்த்தி வைத்த பாத்திரம்
தவழும் பச்சிளம் குழந்தை
அருகே பாலருந்தும் ஆட்டுகுட்டி .....!!

• தங்கேஸ்

# தேசம்

பிறவிக்குள்ளேயே சாதியைப் புதைத்து
வைத்திருக்கும்
ஒரு தேசத்தைக் கொண்டாட
எந்த முகாந்திரமுமில்லை

இந்த மண்ணில் பிறக்கும்
ஒவ்வொரு குழந்தைகளும்
உங்கள் கடவுள்களை
மன்னித்துக் கொண்டேதானிருக்கின்றனர்


.இந்த நாட்டில் தான்
வெட்ட வெட்ட
ரயில் தண்டவாளங்களில்
தலைகள் முளைத்துக் கொண்டேயிருக்கின்றன

அரிவாள்களின் தீராப் பசிக்கு
அட்சய பாத்திரங்கள்
சோற்றுப் பருக்கைகளாக
உயிர்களை தந்த வண்ணமே இருக்கின்றன

இந்த தேசத்தில் தான் சர்வவியாபியாக
கடவுளால் இருக்கவே முடியவில்லை
சாதி இருக்கிறது

முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து
உழைக்கும் வரைக்கும்
அது எங்கும் தன் முகத்தை
காட்டிய படியே
நீக்கமற நிறைந்திருக்கிறது

இந்த தேசத்தில் தான்
பரம பிதாக்களும்
முப்பத்து முக்கோடி தேவர்களும்
சனாதனத்திலிருந்து
தப்ப முடியாமல்
அரங்கேறிக்கொண்டிருக்கும்
ஆணவக்கொலைகளுக்கு
ஊமை சாட்சியாகவே
இரண்டாயிரம்
வருடங்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.



● பாலசுப்பிரமணியம் சிவாந்தினி,
பொற்பதி குடத்தனை.



# ஏக்கத்தில் நீந்திய கனவு

வெளிச்சம் விலகியும் விலகாத ஓர் அழகான பொன் மாலைப்பொழுதில் சூரியன் ஓய்வெடுக்க போகவும், கடல் தாயின் மடியில் தவழ்ந்து கதை பேசவென மிக விரைவாக வந்து கொண்டிருந்தது நிலவு. மாஞ்சோலை போன்ற இரு மாமரங்களின் இடையில் அமைந்திருந்த ஊஞ்சலில் படுத்திருக்க அருகில் இருந்த தென்னங்கீற்றுக்களின் ஊடாக நிலவொளி அவளின் பட்டுப்போன்ற கன்னங்களை முத்தமிட்டுக்கொண்டிருக்க தலையைக் கோதியவாறே புத்தகம் ஒன்றை வாசித்த வண்ணம் இருந்தாள் கவிநிலா.

அப்போது அவளின் அக்கா 'பிள்ளை (அவளை வீட்டில் அழைக்கும் செல்லப்பெயர்) உனது மேசை மீது மாப்பிள்ளையின்ர போட்டோ வைச்சிருக்கு பார். பொடியனுக்கு உன்னை பிடிச்சிருக்காம். ஜாதகப் பொருத்தம் எல்லாம் பொருத்தமா இருக்கடி. மாப்பிள்ளை இன்ஜினியர் நல்ல பொடியனாம்.

சோலி சொரட்டோ, குடிவெறியோ ஒன்டுமில்லையாம். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருக்குமாம். குடும்பமும் பிரச்சினை இல்லை. அண்ணாக்கள் போய் அலசி ஆராஞ்சிட்டான்கள். ஐந்து பேராம் குடும்பத்தில எல்லாம் கல்யாணம் கட்டி விட்டினமாம். தங்கைச்சி மட்டும் இருக்காம். அந்த பிள்ளையும் ரீச்சராம். அந்த பிள்ளை கட்டி முடிய தான் கட்டுவன் என்டு இருந்ததாம் பொடியன். அந்த பிள்ளைக்கு சரிவரேலையாம.; பொடியனுக்கு வயசாகிது என்டு செய்யினமாம். ஆ வயதும் நீ கேட்ட போல மூன்று வயசு பெரியவர் தான். கறுப்பும் இல்லை வெள்ளையும் இல்லை பொது நிறம் பார்க்க அழகாகத் தான் இருக்கு பொடியன். இனி நீ தான் சொல்லனும். எங்களுக்கு எல்லாம் ஓ.கே" என்றவளாய் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

கவிநிலாவோ எல்லாப்பெண்களைப் போல் புகைப்படத்தைப் பார்த்து ஆவல் கொள்ளவோ, அல்லது கல்யாண கனவில் மிதக்கவோ இல்லை. மாறாக ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். நிலவுக்கும் என்ன சலனமோ அவளோடு சேர்ந்து குளிர் காய்ந்தது.

கவிநிலா உலகத்தில் அதிக அதிகமாக நேசிப்பது அவளின் அண்ணாமார்;, அக்காமார் அவர்களது குழந்தைகளை தான். அப்பா அம்மா இல்லை. இருந்தும் அவள் அன்பை கேட்டு யாரிடமும் யாசகம் கேட்கவில்லை. அவர்கள் வீட்டில் முடி சூடாத இளவரசி அவள். பண்பாய் வளர்த்தார்கள், பட்டம் பெற வைத்தார்கள், அரச பணியில் இருப்பதைக் கண்டு பெருமையும் பட்டார்கள். அவர்கள் தனக்கு மிகத்தரமான ஒருவனையே தருவார்கள் என்ற நம்பிக்கையிலே பேசி செய்யும் திருமணத்தை விரும்பினாள். இருந்தும் வீட்டில் ஒரு நிபந்தனையையும் கூடவே வைத்தாள். தன்னை திருமணம் செய்ய விரும்பும் நபரோடு தொலைபேசியில் உரையாடிய பின்னரே தனது முடிவைக் கூறுவேன் என்றாள். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

எத்தனை மாப்பிள்ளை பேசி வந்தாலும் தங்கள் தங்கைக்கு பொருத்தமானதை மட்டுமே அவள் காதிற்கு கொண்டு வருவார்கள். தேவையறிந்து கதைக்கும் பக்குவம் கொண்டவர்கள் அவர்கள். ஏற்கனவே இரண்டு நபர்களை அவளுக்கு பொருத்தமாகக் கொண்;டு வந்த போதும் கவிநிலா கதைத்த பின் அவர்கள் வேண்டாம் என்று கூறி விட்டனர். இதனால் தான் அவள் புகைப்படத்தைப் பார்க்க விரும்பவில்லை. இப்படத்தை மட்டுமல்லை முதலும் அவர்கள் இருவரது புகைப்படங்களையும் இவள் பார்க்கவில்லை. திருமணம் செய்ய அவர்கள் மறுத்த பின்னும் அவர்களை ஏதேர்ச்சியாக சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் கூட நெருடல் இல்லாது இயல்பாக கடக்க முடியும். தொலைபேசியில் மட்டும் தனது கோரிக்கையை மட்டும் முன் வைத்தாள். அதனால் இவனும் வேணாம் என்று கூறிவிட்டால் என்ன செய்ய என்று யோசித்தாள். வீட்டில் எல்லாருக்கும் பிடிச்சிருக்கே. அதற்காக என் உணர்வுகளை மதிக்காது தங்கட விரும்பத்திற்கு வாழ சொன்னால் முடியுமா? என்னால முடியாது. அடுத்தவர் விருப்பத்திற்கு தான் வாழ வேண்டுமென்றால் செத்து விடு என்று விவேகானந்தர் சொல்லி இருக்கிறார். காலையில் கதைத்து தான் பார்ப்போமே என்றவளாய் கண்ணயர்ந்தாள்.

இரவு அதிக நேரம் விழித்து இருந்ததால் பட்சிகளின் ஒலிகளோ, பலத்த சத்தமாக கேட்கும் ஆலயமணி ஓசையோ அவள் காதில் விழவில்லை. ஜன்னல் வழியாக கதிரவன் தன் கதிர்களை அவள் மீது பரப்பவே கண் விழித்தாள் கவிநிலா.

காலை கடமைகளை முடித்த பின்னர் தாயின் படத்திற்கு முன்னால் வந்து அம்மா நான் ஆசைப்படுற வாழ்க்கை வாழ ஒருத்தனைக் கொடுத்திடுங்கம்மா. தாயை ஆயிரம் தடவைகள் மனதிற்குள் நினைத்துக் கொண்டு தன்னை மணம் செய்ய ஒப்புக்கொண்ட மாப்பிள்ளை நிவினுக்கு தொலைபேசி அழைப்பெடுத்தாள். ஹலோ சொன்ன அடுத்த கணமே சொல்லுங்கள் கவிநிலா என்றான். இதனால் தன்னை அறிமுகப்படுத்தும் தேவை கவிநிலாக்கு இருக்கவில்லை.

சம்பிராயத்திற்காக நலம் விசாரித்தவள் நேரடியாக விசயத்திற்கு வந்தாள். இங்க பாருங்கள் நிவின் நீங்கள் என்;னை மணந்து கொள்ள சம்மதம் தெரிவித்தமை மகிழ்ச்சி. என் குண நலம் பற்றி பலரும் நன்றாக கூறியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதனால் நீங்கள் என்னை விரும்பி இருக்கலாம்.

ஆனால் யாரும் என் உணர்வுகளை மொழி பெயர்த்து இருக்க மாட்டார்கள். நான் மொழி பெயர்த்த பின் நீங்கள் திருமணத்திற்கு மறுப்பு சொன்னாலும் நான் ஆர்ச்சரியப்படுவதற்கில்லை. அதற்காக நான் சொல்லாமலும் இருக்க முடியாது. ஏனெனில் என் வாழ்க்கையை நான் தான் வாழ வேண்டும். எனக்காகவும் நீங்கள் வாழ முடியாதல்லவா? கவிநிலா புதிர் போட்டவளாக இழுத்துக் கொண்டிருக்க அமைதியிழந்த நிவின் விசயத்திற்கு வாருங்கள் என்றான்.

கவிநிலா இந்த பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவன் மனதிற்கு இளைய ராஜா இசையைக் கேட்ட மாதிரி ஒரு சந்தோசம். தன் பெயருக்கு பின்னல் இந்த பெயர் தான் வர வேண்டும் என எண்ணிக்கொண்டான். அவளை விசாரித்த பொழுது எவருமே தப்பாக ஒரு வார்த்தை தன்னும் கூறவில்லை. அவளின் புகைப்படத்தை பார்த்த கணமே கண்களால் அளவெடுத்து மனதில் பதிந்து கொண்டான். இவ்வளவு ஆசையில் இருந்த நிவினுக்கு அவளது வார்த்தைகள் பயத்தை உண்டு பண்ணியது.

லவ் ஏதாவது என்று நிவின் இழுக்கவும் சீ சீ அப்படி ஒன்றுமில்லை என்றாள். அப்போ என்ன என்றான் பொறுமை இழந்தவனாய். நான் உங்களை திருமணம் செய்தவுடன் எனது வேலையை நிறுத்தி விட்டு முழு நேர மனைவியும், தாயுமாகவே இருக்க விரும்புகிறேன். இதற்கு சம்மதம் என்றால் நானும் வீட்டில் சம்மதம் கூறிவிடுகிறேன். உங்கள் வருங்கால மனைவி பற்றி உங்களுக்கும் ஒரு கனவு இருக்கலாம். நீங்கள் ஒரு இன்ஜினியர் பொதுவெளியில் உங்கள் மனைவி வேலையில்லை வீட்டுப்பணி என்று சொல்லக்கூட கௌரவ குறைச்சலாக இருக்கலாம். என்னைப்பிடிச்சிருக்கு என்டுறது வேற. சேர்ந்து வாழ்றது என்பது வேற யோசிச்சு சொல்லுங்கள் நான் எனது ஆசையை சொல்றேனே தவிர உங்கள் மீது திணிக்கவில்லை.

அவள் பேசியதைக் கேட்டதும் அதிர்ந்து போனான். என்னடா கல்யாணம் ஆனவுடன் வேலைக்கு போக தடுக்க கூடாது என சண்டையிடும் பெண்கள் மத்தியில் இவள் வித்தியாசமாக உள்ளாள் என்று கவிநிலாவை படிக்கத் நினைத்தான்.

சுவாரசியம் மேலிட பக்கங்களை புரட்டுவது போல் கேள்வி கணைகளைத் தொடுத்தான். அடக்கி வைத்த கவிநிலாவின் உணர்வுகள் அணைக்கட்டு உடைத்த வெள்ளம் போல வலிகள் வந்து விழுந்தன பதில்களாக.

என்னைப் போல சந்தோச நதியில் நீச்சல் அடித்தவர்களுமில்லை. என்னைப் போல் அனலிடையில் வெந்தவர்களும் கிடையாது. எனக்கு எட்டு வயசில அப்பா இல்லை. நினைவு தெரிஞ்ச நாள் முதல் மொத்த பாசமும் தந்தது அம்மா என்ட தெய்வம் தான். அம்மாவை விட்டு ஒரு நிமிசம் கூட பிரிஞ் சிருக்க எப்போதும் என்னால் முடியாது. நான் படித்து பட்டம் பெற்று தன் பெயர் சொல்ல வைக்க வேண்டும் என்று அம்மாக்கு ஆசை. அதனால் நாங்கள் எல்லாரும் நகரத்திற்கு சென்று வாழ அம்மாக்கு பொருளாதார சூழல் சாதகமாக இருக்கவில்லை. என்னை மட்டும் நகரத்திற்கு அனுப்பி படிக்க வைக்க முடிவெடுத்தார். அம்மாவின் ஆசைக்காக பதின்மூன்று சிறுமியாகிய நான் உறவினர்களோடு தங்கியிருந்து படிக்க கண்ணீரும் கம்பலையுமாக சென்றேன். நான் அம்மாவைப் பிரிந்த ஒன்டரை வருடங்களில் திடீரென ஒரு நாள் கடைசி தருணத்தில் புற்றுநோய் என இனங்கண்டு அம்மா என்னை விட்டு நிரந்தரமாக பிரிந்து விட்டார். அதுவும் தன் கடைக்குட்டியோட கடைசியாக எதுவும் பேசவுமில்லை. முகத்தைப் பார்க்கவுமில்லை. அந்த ஒன்டரை வருடங்களாவது ஊரில் இருந்திருக்க அம்மாவின் அன்பை அனுபவித்து இருப்பன் அல்லவா? அதை நினைத்து ஏங்கி ஏங்கி பைத்தியம் பிடிக்கிற போல இருந்தன் .காலவன் கணக்கெழுதி இடையிலேயே அம்மாவை பறித்திடுவான் என்டு அம்மா தான் நினைச்சவாவா? அல்லது நான் தான் நினைச்சனா? என்று குரல்கள் தழுதழுத்தன. கவிநிலாக்கு என்ன சொல்வது என்று நிவின் தவிக்கவும் நிலா தன்னை சுதாகரித்துக்கொண்டு தொடர்ந்தாள். என் பிள்ளை ஒரளவுக்கு வளரும் வரை முழுநேர தாயாக நான் இருப்பேன். நான் பட்ட துன்பத்தை, தாய் பாசத்திற்கு ஏங்கிய ஏக்கத்தை என் பிள்ளைக்கும் கொடுக்க கூடாதென இந்த முடிவு எடுத்தேன்.

நாங்கள் இருவரும் வேலைக்கு போட்டு வர பெற்றோர் இருந்தும் யாரோ ஒருவரின் அரவணைப்பில்

என் பிள்ளை அநாதையாக ஏன் வாழ வேண்டும். வேலை முடித்து நான் வீட்டுக்கு வர அன்னையாகிய என்னை ஆயா என அழைக்கும் துர்பாக்கிய நிலையும் உருவாகலாம். என் பிள்ளைக்காக வாழ்க்கையே கொடுப்பேன். என் பிள்ளைகள் வளர்ந்து ஆளாகும் வரை வேலையை விட்டால் தான் என்ன? பெற்ற பிள்ளைகளுக்காக மொத்த கனவினையும் தொலைப்பவள் தானே தாய். ஆனால் நான் வீட்டில் இருந்தவாறே கிடைக்கும் நேரங்களில் எனது ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள முயற்சிப்பேன். 50 வயதிற்கு பிறகும் தமது கனவுகளில் வெற்றி பெற்றவர்கள் பலர் உள்ளனர்.

கூடிப்போன தேவைகளுக்கும், கூடிப்போன பொருளாதாரத்திற்கும் இரண்டு பேரும் வேலைக்கு போனால் தான் சமாளிக்க முடியும் என நீங்கள் நினைக்கலாம். இயற்கைக்கு பணம் என்றால் என்ன என்றே தெரியாது. பணம் இருந்தால் தான் வாழ்க்கை என்பது இயற்கையின் நியதியாக இருந்திருப்பின் பணம் மரத்தில் கொத்து கொத்தாகக் காய்த்து இருக்கும். உலகின் உயிர் நாடி உறவுகள் தான். பணம் மனிதனின் கண்டு பிடிப்பு. தேவைக்கு அளவாக சம்பாதித்து பயனுள்ளதாக பயன்படுத்தினால் போதும். ஆடம்பரத்தை குறைத்து அவசியத்ஜீற்கு மட்டும்.

எனக்கு தெரிந்து பிள்ளைகளோடு கூடவே இருந்து தேவையான பாசத்தை கொடுக்கவும்;, ஒட்டு மொத்த உறவுகளை காட்டி வளர்க்கவும்;, பண்பாட்டையும் பாரம்பரியத்தையும், பழக்கவழக்கங்களையும் சொல்லிக்கொடுக்கவும் தேவைகளை நிறைவேற்றி அன்பான வாழ்க்கை வாழ இன்ஜினியரின் சம்பளம் போதுமானது என்றாள் நிலா.

பணம் நிறைய வைத்திருப்பவர்களைப் பார்க்கும் போது, ஒரு வேளை பணம் தான் மகிழ்ச்சிக்கு மூல காரணமோ என்று சந்தேகித்து தான் இயந்திரம் போல பணத்தைத்தேடி ஓடி ஓடி எதற்காக பிறந்தோம் என்பதை மறந்து வாழ்க்கையைத் தொலைக்கின்றனர். நானும் இயந்திர வாழ்க்கை வாழ விரும்பவில்லை. அகிலத்தின் அச்சாணி அன்பு, பாசம். அந்த வாழ்க்கை போதுமானது. உறவுகள் எனும் விருட்சத்தில் பாசம் எனும் ஊஞ்சல் கட்டியாடுவோம. அது சொர்க்கம். இருக்கிறதை கொண்டு என்னால் குடுத்தனம் நடாத்த முடியும். என்று தான் சொல்ல வந்த விடயத்தை மூச்சு விடாமல் சொல்லி முடித்த திருப்தியில் இருந்தாள் கவிநிலா.


நிவினுக்கு, கவிநிலாவின் உணர்வுகளும், ஏக்கமும் நன்;கு புரிந்தது. அவளது உணர்வுகளை மதித்தான். இங்க பாருங்க நிலா எனக்கான அன்பான மனைவியைத் தான் நான் தேடுறனே தவிர எனக்கான கௌரவத்தையல்ல. அந்த வகையில் நீங்கள் நிலவு தான். என் வாழ்க்கை என்றும் பிரபாசமாய் இருக்கும். நீங்கள் வேலைக்கு போக விரும்பவில்லை. அதனால் போதீர்கள் உங்களுக்கு போகனும் என்று தோனும் போது கூட போக வேணாம் என்று தடை போட மாட்டான். என்றான். எனக்கு கல்யாணத்திற்கு பூரண சம்மதம் என்றான். சம்மதம் சொன்ன அக்கணமே ஆயிரம் மடங்கு அழகாகி விட்டான் அவள் மனதில். ஆமா பெண்களின் உணர்வுகளை மதிக்கும் ஆண்கள் என்றும் அழகானவர்களே. ஒத்த மனங்கள் இரண்டும் இல்லறத்தில் இணைய முடிவெடுத்தனர்.

கவிநிலா ஆனந்தத்தின் எல்லை வரை சென்று துள்ளிக் குதித்தாள். தனது அன்னை தான் விரும்பிய மாதிரி ஒரு வாழ்க்கைத்துணையை தந்து விட்டார் என தாய்க்கு நன்றி சொன்னாள்.

விரும்பிய கணவரை தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்களுக்கு கிடைத்தாலும் திருமணத்திற்கு பின் பெண்கள் தாம் எவ்வாறு வாழ வேண்டும் என கூறும் உரிமையை பெரும்பாலான பெண்களுக்கு ஆண்கள் இன்னும் வழங்கவில்லை. இல்லை பெண்களே தங்கள் உரிமைகள் சுதந்திரங்களை அழகாக பயன்படுத்தவில்லை என்றே கூறலாம். வாய் திறந்து கதைத்தால் தான் வாய்ப்புக்களை பெற முடியும். அந்த வகையில் கவிநிலா அதிஷ்டசாலி தான். அவள் தன் கடமைகளை உணர்ந்தவளாய் தன் உரிமைகளையும் அனுபவிக்க ஆசைப்படும் சமத்துவத்தை விரும்பும் சாமானிய பெண் இவள்.

தன் உணர்வுகளை மதிக்கும் ஆசை கணவன் கிடைத்த சந்தோசத்தில் எல்லாப் பெண்களைப் போல கல்யாண கனவில் மிதந்தாள் கவிநிலா.

● வடகோவை வரதராஜன் (இலங்கை)



# அது ஒரு மழைக்காலம்

அவன் பஸ்சால் வந்து இறங்கும் போதே யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் வள்ளம் விடலாம் போல் வெள்ளக்காடாக இருந்தது. சாரதி கொஞ்சம் முன்யோசனை உள்ளவனும் நல்ல மனம் கொண்டவனும் போல, உள்ளதில் மேடான இடமாகப் பார்த்து நிற்பாட்டினான்.

ஐந்து மணித்தியால பிரயாணச் சோம்பலை முறித்தபடி படிகளில் இறங்கினான். கீழே இறங்குவதற்கே அருவெருப்பாக இருந்தது. நல்ல வேளை சப்பாத்துடன் புறப்பட்டது.

தப்புத்தண்ணீரில் கால்களை நாசூக்காக வைத்துத் தண்ணீர் தெறிக்காதபடி நடந்தான். மழை இன்னும் நசநசத்துத் தூறிக்கொண்டே இருந்தது. குடைக்கும் அவனுக்கும் எட்டாப் பொருத்தம். ஏதோ பந்தயம் கட்டி தொலைப்பதுபோல் குடையைத் தொலைத்து விட்டு வருவது அவன் வாடிக்கையாய் விட்டது.

கண்டியில் மட்டும் நாலு குடை தொலைத்திருப்பானா? இருக்கும். கண்டி மழையையும் கம்பஸ் பெட்டையளையும் நம்பக்கூடாது என்று அவன் சீனியர் மாணவர்களால் கல்லூரியில் நுழைந்தபோதே சொல்லித்தரப்பட்டது. கம்பஸ் பெட்டையள் எப்பிடியோ கண்டிமழை அவனைப் பலமுறை ஏமாற்றியிருக்கிறது.

இதமான வெய்யில் வரித்துக் கொண்டிருக்க கண்டி ரவணில் உல்லாசமாக உல வந்து கொண்டிருந்தால், இருந்தால் போல் மழை கொட்டோ கொட்டென்று கொட்டித்தள்ளி விடும். மழை ஓயுமட்டும் எங்காவது கடை மூலையில் மௌன தவம் கிடக்க வேண்டும். அந்த வேளைகளில் பொழுது போகாமல் அடுக்கடுக்காக சிகரற் பிடிப்பதால் அப்பா அனுப்புகிற காசை சரியாக்கிறதாக ஓர் தற்கூச்சம் எழும். ஒவ்வோர் சிகரற்றின் தணல் முனையிலும் அம்மாவின் முகம் தெரியும்.

"எனது மகன் எவ்வளவு பொறுப்புணந்தவன், கண்ணியவான்" என இறும்பூது எய்துகின்ற அந்த அப்பாவித்தாயின் பிம்பங்களை சிகரற் முனையில் எரிகின்ற குரூரத்தனத்தை நினைத்து கணப்பொழுது வருந்துவான். நலல் காலம். குடி பழகாமல் விட்டது என்று ஓர் சுயசமாதானம் செய்து கொள்வான். அம்மாவின் முகமா? அல்லது குடியில் நாட்டமின்மையா? அவன் குடியின் பக்கம் போகாததற்குக் காரணம் என்று இன்னும் அவனுக்குச் சரியாகப் புரியவில்லை.

குடி ஒரு கெட்ட பழக்கமா?

அப்படியாயின் அவனின் நண்பர்களில் 70வீதமான மாணவர்கள் கெட்டவர்கள் அடுத்தவனுக்கு இடைஞ்சல் தராத அடுத்தவன் மனதை காயப்படுத்தாத எந்தவோர் செய்கையையும் அவன் கெட்ட செயலாகக் கருதியதில்லை.

மழை இன்னும் சற்று வலுத்தது. தோள்மூட்டில் தொங்குகின்ற பையை இலாவகமாகக் கழற்றித் தலைக்கு நேரே பிடித்தபடி பூபாலசிங்கம் புத்தகசாலையை நோக்கி விரைந்தான். புத்தகசாலை ஓரத்தில் ஒதுங்கியவன், தோல் பையில் தண்ணீரை கைகளால் வழித்துவிட்டு, கைக்குட்டையை எடுத்து கைகளிலும் தலையிலும் தண்ணீர்பட்ட இடங்களைத் துதை;து விட்டான். புதிதாக ஏதாவது புத்தகம் வந்திருக்கிறதா என நோட்டமிட்டு ஏமாந்தான். இவனையும் இவன் வந்து தேடுகின்ற புத்தகங்களையும் நோட்டமிட்டு வைத்திருக்கிற அந்த சிப்பந்திப் பையன் இது பார்த்தீர்களா? என்று ஓர் சிற்றிலக்கிய சஞ்சிகையைத் தூக்கிப் போட்டான். தூக்கிப் பிரித்து உதட்டைப் பிதுக்கி 'பார்;த்திட்டேன்' எனப் பொய்சொன்னான்.

ஜனரஞ்சக இலக்கியத்தை எதிர்த்து போர்க்கொடி பிடித்து புதிது புதிதாக முளைத்து சில இதழ்களிலேயே மடிந்து விடுகிற சில இலக்கியச் சஞ்சிகைகளின் வக்கரிப்புத் தனத்தைக் காட்டிலும்-பம்மாத்துத் தனத்தைக் காட்டிலும், இந்த ஜனரஞ்சக சஞ்சிகைகளை ஓரளவிற்கேனும் சகித்துக் கொள்ளலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

இந்திய வாராந்திரிகளில், சினிமாவிற்கு என்று சில பக்கங்கள் ஒதுக்கப்படுவது போன்று இவற்றில் இலக்கிய கிசுகிசுக்களுக்கும் புழுதிவாரி இறைப்பதற்கும அனேக பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன என இவன் நண்பன் மகேந்திரன் ஒருமுறை சொன்னது ஞாபகம் வந்தது.

மழை இன்னும் நசநசத்துத் தூறிக்கொண்டே இருந்தது. பையை ஓரமாக வைத்துவிட்டு, சற்று ரிலாக்ஸ் ஆக பஸ் நிலையத்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கினான்.

எத்தனை வர்ணக்குடைகள்?

மழைக்காலமும் வர்ணக் குடைகளும், மனசுக்கு ரம்மியமளித்தன. அந்தக் குடைகளில் சோடி சோடியாக போகின்ற இளவட்டங்கள் இன்னும் ரம்மியமாக இருந்தார்கள்!

என்ன உற்சாகமாய் மழை பெய்வதையே மறந்து, அல்லது மழையி; ஈரலிப்பால் கிளுகிளுப்படைந்து - ஒரு குடையில் இருவராக கலகலப்பாக பேசிச் சிரித்தபடி செல்கின்றார்கள்.

அந்த ஆண் எவ்வளவு பாதுகாப்பாக தன் காதலியை - அது அவன் மனைவியாய்கூட இருக்கலாம் - அந்தக் குடையினுள் அணைத்தவாறே கூட்டிச் செல்கின்றான். எனக்கும் ஓர் காதலி இருந்திருந்தால் இந்த மழைக் காலத்தில் அவளின் வர்ணக் குடையின்கீழ் கதகதப்பாக மற்றவர்களின் பார்வையில் பொறாமை மூட்டுகின்ற ஓர் கம்பீரத்துடன் அவளுடன் பேசிச் சிரித்தபடி போகலாம் என நினைத்தான்.

இந்த வயதிலும் இன்னும் ஒருத்தியைக்கூட தான் விரும்பிக் காதலிக்காதது அவனுக்கே வேடிக்கையாகவும் வியப்பாகவும் இருந்தது.

ஒருநாள் இவ்வாறான மழைக்காலத்தில்தான் கன்ரீனில் இருந்து ஆவி பறக்கத் தேனீர் குடித்துக் கொண்டிருக்கும் போது சோமாவதி, 'நாங்கள் ரெண்டு பேருமே ஒரு பாசை பேசுகிற ஆக்களாய் இருந்தால் எவ்வளவு நல்லதாய் இருந்திருக்கும் சந்திரன்' என்று கண்களில் சுடர் மின்ன, ஓர் வகை ஆதங்கத்துடன் கேட்டாள். சோமா என்ன அர்த்தத்தில் அவ்வாறு கேட்டாள்?

அவளின் கேள்வியை விளையாட்டாக எடுத்து சிகரற் புகையை அவளின் முகத்தில் குப்பென ஊதி அவள் அருவெறுத்து ஒதுங்கிய அந்த அழகைத்தான் இரசித்தானே ஒழிய அந்தக் கணத்தில் அது ஒரு கேள்வியாக அவனுக்குப் படவில்லை.

ஒருவேளை சோமா என்மீது பிரேமையுற்றுத்தான் அப்படிப் பூடகமாகக் கேட்டாளோ?

காதல் என்பது என்ன?

கடிதங்கள் பரிமாறிக் கொள்வதும், சோடி சோடியாக மரங்களின் கீழ் இருந்து கதைப்பதும்தான் காதல் என்றால் அவனுக்கும் காதலுக்கும் வெகுதூரம்.

இத்தகைய காதல் தனங்களை எதிர்பார்த்துதான் ஆரம்பத்தில் அவன் 'எள்' என்றவுடன் எண்ணெய்யுட் வந்து நின்ற சிவகாமசுந்தரி காதலுக்கும் உனக்கும் வெகுதூரம் என்பது போல் அவன் கண்முன்னாலேயே எவ்வித குற்ற உணர்ச்சியும் இன்றி சிவராஜனுடன் ஒட்டிக்கொண்டாள்.

'சிவ'வை மாத்திரம் விட்டுவிட்டு அவன் பெயரையே ஒருமுறை உச்சரித்து அவளுக்கு ஏற்ற பெயர்தான் எனத் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான்.

சிவகாமசுந்தரி அவனைவிட்டு பிரிந்ததும் ஓர் வழியில் ஆறுதலாக தோன்றினாலும் ஓர் வகை கௌரவப் பிரச்சினையாகவும் தோன்றியது. அவளின் புத்தி மளுங்கிய அசட்டுக்கதைகளும் நான் இவனுடன் வலுநெருக்கம் என்பதாய் மற்றவர்கட்கு காட்டிக்கொள்ளும் அதீதப் பழக்கங்களும் அவனுக்கு எப்போதும் எரிச்சலாகவும் தொணதொணப்பாகவும் தோன்றினாலும், அவளின் நெருக்கத்தில் மற்றவர்களின் பொறாமைத்தீயை கிளப்பிவிட்டு அதில் குளிர் காய்கின்ற குரூரத்தனமான ஓர் இன்பத்தை அவள் அனுபவித்தது ஏதோ உண்மைதான்.

சிவகாமசுந்தரியின் பிரிவால் ஏற்பட்ட இழப்பைக் காட்டிலும், கழன்றது 'பிலாக்காய்ப்பால்' என்ற ஆறுதல் உணர்ச்சியே இப்போது அவனுக்கு உயர்வாய் தோன்றியது.

பளீர் என மின்னல் வெட்டி பெரும் இடியொன்று இடித்து அதன் எதிரொலி சில கணங்கள் அலை அலையாகப் பரவியது.

இப்படியான மழைக்காலம் ஒன்றில்தான் அவனும் பபியும் பார் ஒன்றில் தர்க்கித்துக் கொண்டார்கள்.

சிகரற் பைக்கற் ஒன்றை இவன் முன்னே தூக்கிப் போட்டுவிட்டு பபி மென்டிஸ் ஸ்பெசலை 'சிப்பண்ணி சிப் பண்ணி' அருந்திக் கொண்டிருந்தான். போதை ஏற ஏற அவன் கண்கள் உப்பி, கன்னங்கள் கன்றிப் பொது பொதுத்தன, ஏதோ சிந்தனை வசப்பட்டிருந்த பபி திடீர் என்று இவனைப் பார்த்து 'நீயேன் குடிக்கிறேல்லை' என்றான். பபியின் திடீர் கேள்விக்கு என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் திகைத்து பின் அசடாக மழுப்பிச் சிரித்தான்.

"ஏன் குடியொரு கெட்ட பழக்கம் எண்டு நினைக்கிறியா ?"

"சீ... சீச்சி அப்பிடியொண்டுமில்லை, ஏதோ பழகேல்லே"

"அப்ப, இந்தா ஒரு ட்ராம் அடிச்சுப்பாரன்"

“சீ. சீ... வேண்டாம் மச்சான்” - இவன் கதிரையைப் பின்னோக்கி தள்ளி அவசரத்துடன் மறுத்தான்.

இவனின் பதட்டத்தைக் கண்டு கேலியாக சிரித்த பபி சிரிப்பிற்கிடையே ‘ஏன்’ எனக் கேட்டான்.

‘ஏன் தேவையில்லாமல் ஒரு பழக்கத்தைப் பழகுவான் ? பேந்து அதை விடுறதுக்கு கஷ்டப்படுவானேன். பாரன் இந்த சிகரற்றை பகிடிபகிடியாய் பழகிப்போட்டு இப்ப விடக் கஷ்டமாய் கிடக்கு”

“அப்ப குடிக்கிறது ஒரு கெட்ட பழக்கமெண்டும், அதை தேவையில்லாமல் ஏன் பழகுவான் எண்டும் நீ நினைக்கிறாய் அப்படித்தானே”

“முழுக்கச் சரியாய் இல்லாட்டிலும், அதுவும் ஓரளவிற்கு உண்மைதான்” பபி மீண்டும் சிரித்தான். கேலி தெறித்து வீழ்ந்தது.

“அதெப்படி ஓரளவிற்கு உண்மையானது, முழுக்கச் சரியில்லாமல் போகும்” என்றவாறே பபி ஓர் சிகரற்றைப் பற்றவைத்து தலையை ஒரு கையால் கோதிவிட்டபடி,

“நீ குடிக்காததிற்கு உண்மையான காரணத்தை சொல்லட்டே.”

“சொல்லன்”

“நீ எங்களோடை படிக்கிற பெட்டையளுக்கு பயப்படுகிறாள்” என்றவிட்டு சில கணங்கள் இவனையே ஊடுருவிப் பார்த்தான்.

தான் கொடுக்கப் போகிற மன அடிகளுக்கு, முதல் அடியிலயே சிறிது ஆசுவாசப்படுத்தி கொண்டது என்பது போன்றிருந்தது அவன் பார்வை.

சிகரற்றை ஆழ உறிஞ்சி மீண்டும் தொடர்ந்தான். “பெட்டையள் உன்னிலை வைச்சிருக்கிற இமேஜைப் பற்றி நீ நல்லாய் கவலைப்படுகிறாய். இந்த இமேஜைப் பாதுகாக்கிறதுக்காண்டி உனக்கு நீயே பல முகமூடிகளைப் போட்டு உன்னை நீ அழகு பார்க்கிறாய். அடிப்படையில் நீ நல்லவனாய் இருக்கலாம். ஆனால் மற்றவர்களுக்காக நீ போடுகிற நல்லவன் முகமூடி ரொம்ப கோழைத்தனமானது. இந்தக் கோழைத்தனம், போலிப்புகழ்ச்சிக்கு உன்னை அடிமையாக்கி, உன்ரை சொந்த வாழ்க்கையிலை உன்னை அதல பாதாளத்திலை தள்ளி விழுத்தும்.”

பெட்டையளாலை ‘அட்மையர்’ பண்ணப்படுகிற ஒரு இமேஜைத்தான் நீ விரும்புகிறாய். பெட்டையள் மாத்திரம் இல்லை. குடும்பப் பெண்கள்கூட சந்திரன் அருமையான பிள்ளையெல்லே என்ற புகழ்ச்சியைத்தான் நீ விரும்புகிறாய்.

ஆனா பெட்டையாளாலை இலேசில் வளைக்கப்பட முடியாதவன் என்கிற வேறையோர் முகமூடி!

பெடைடையளோடை கனக்க வழயிறவங்களைவிட அளவோட கதைச்சிட்டு விலகிறவர்களை எண்ணித்தான் பெட்டையள் கனவுகாணுறவை எண்ட உண்மை உனக்கு தெரிஞ்சிருக்கு. இந்தக் குயுக்தியை வைச்சுக் கொண்டு, எல்லாப் பெட்டையளாலும் கவரப்படுகிற ஒரு ஆளாய் உன்னை நினைச்சுக் கொண்டு திரிகிறாய். இதிலை ஒரு ஊமைச் சந்தோசமும் உனக்கிருக்கு.

உன்ரை சிவந்த தோலையும், பெண்மைச் சாயல் கொண்ட முகத்தையும் நீ போடுகிற முகமூடிகளையும் வைச்சுக் கொண்டு பழகிற ஒவ்வோர் பெட்டையளுக்கும் என்னிலை ஒரு ஐடியா இருக்கெண்டு, உனக்குள்ளை சொல்லிப் பெருமிதப்பட்டு, அந்தப் பெருமிதத்திலை ஒரு ஊமைச்சுகம் கண்டு அந்த ஊமைச் சுகத்திலை தலைகிறங்கிப் போறாய்.

மொத்தத்திலை எந்தவொரு பெண்ணையும் காதலிக்கத் துணிவில்லாத கோழை நீ. யெஸ் யூ ஆர் எ கவேர்ட்.

“சந்திரன், காதலிக்க ரொம்ப மனத்துணிவு வேணும். ஆனா உன்னட்டை அது துளியும் இல்லை.

ஒண்டு சொல்லுறன். கோழையள் வாழ்நாளிலை ஒரு நிமிசம்கூட சந்தோசமாய் இருக்க மாட்டினம்."

பபி மீண்டும் ஓர் சிகரற்றிற்காக தீக்குச்சி கிழித்தான். பபியின் கதைகளால் இவன் கிடுகிடுத்துப் போய் இருந்தான். பபியின் கூற்றுக்களில் எவ்வளவுதூரம் உண்மை, பொய் என்ற அக்கணத்தில் அவனால் அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும் பபி சொன்னவற்றை முற்றாகப் புறம்தள்ளி வைக்க ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது.

என்னைவிட இரண்டு வயதில் குறைந்தவன். விரிவுரைகட்கு மட்டம் போடுவதில் சாதனை எடுத்தவன். அதனால் படிப்பில் மட்டமானவன் என சக மாணவர்களால் ஏளனப் பார்வை பார்க்கப்படுபவன். அந்த பபி எவ்வளவு தூரத்திற்கு என்னை அனலைஸ் பண்ணி இருக்கிறான் என இவன் வியந்தான்.

"என்ன யோசிக்கிறாய் ? நான் வெறியிலை புலம்பிறன் எண்டு நினைக்கிறாய் போலை கிடக்கு. எல்லா வெறிகாறரும் இப்படித்தான் கேப்பாங்கள். ஆனா ஒண்டை மட்டும் கேள்! உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ளாதை உனக்கே நீ முகமூடி போட்டுக்கொள்ளாதே!

தெரிஞ்சகைவ்கு முன்னால் சிகரற்பத்தப் பயம்!

குடிக்கப் பயம்!

காதலிக்கப் பயம்!

ஆருக்காண்டி இந்தப் பயங்கள்!

நீ பயந்து பயந்து சாகிற ஒரு கோழை!

கோழை மனசுக்கு பெருந்தன்மை முகமூடி போட்டு சாதாரண இளைஞனுக்குரிய இயல்பூக்கங்களை அடக்கி வைக்கிற மகா கோழை!

ஒருநாள் எண்டாலும் நீ நீயாக இருந்துபார்!

உன்ரை இயல்பூக்கங்களை வெளிப்படுத்து!

அப்ப மனசு எவ்வளவு சந்தோசமாய் விசாலப்படுகுது எண்டதை அனுபவிச்சுப்பார்!

நீ ஆருக்காக வாழுகிறாய் எண்டதே உனக்குத் தெரியாமல் இருக்குது.

அம்மா, அப்பாவுக்கு குடும்பப் பொறுப்புணர்ந்த மகன்!

சகோதரங்கட்கு அன்பை பொழிகிற அண்ணா!

பெட்டையளுக்கு கௌரவமான கெட்டிக்கார இளைஞன்!

நண்பர்கட்கு எழுத்தாளன்! கவிஞன்! சிந்தனாவாதி!

எல்லாம் மற்றவர்கட்கா!

எல்லாம் மற்றவர்கட்காக போடுகிற விதம் விதமான முகமூடிகள்!

இதில உன் சுயம் என்ன?

உனக்கே தெரியாது!

ஒருநாள் எண்டாலும் நீ நீயாக வாழ்ந்தியா?

"மை, புவர், பிரெண்ட், மற்றவர்களுக்காக உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ளாதே ! அதென்ன ஒரு சினிமாப்பாட்டு... வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ?

அருமையான பாட்டப்பா! இந்த உலகத்திலே தனியாகப் பிறந்த நாங்கள் தனியாகத்தான் போகப் போகிறம். இந்த இடைக்காலத்திலை உனக்காகவும் கொஞ்சம் நீ நீயாய், சுயம்புவாய் வாழ்ந்துபார் அதுதான் நித்தியமானது"

பபி திடீர் என மௌனமாகி பாதிக்கு ண்முல் காலியாகி இருந்த மதுக்குப்பியைப் பார்த்தான். பின் எங்கோ சூனியத்தை வெறித்தான். அவன் கையில் இருந்த சிகரற் வெண்மையும் சிறிது ஊதாவும் கலந்து மெல்லிய கோடாக புகை எழுப்பிக் கொண்டிருந்தது.

அந்த சிகரற் புகையில் வளைவு, அது நெழிந்து குழைந்து செல்லும் அழகு இவற்றில் இலயித்திருந்தான். இவன்,

இருந்தால் போல் சிகரற்றை ஆழ உறிஞ்சி, சுட்டு விரலால் சாம்பலை கிண்ணத்தில் உதிர்த்தபடி,

"நீ என்னைக் குடிகாரன் எண்டு நினைக்கிறியா சந்திரன்... ?"

"..."

"சொல்லன்.... நான் ஒரு குடிகாரனா?"

இதற்கு என்ன பதிலைச் சொல்வது எனத் தடுமாறிய இவன் பின்னர் ஒப்புக்காக "இல்லை" என்றான்.

குட்! நீ தான் என்னைப் புரிஞ்சி கொண்டவன். நான் குடிகாரன் இல்லை. மது அருந்துகிறவன். குடிகாரனுக்கும் மது அருந்துகிறவனுக்கும் கனக்க வித்தியாசம் இருக்கு.

எனக்கு மது அருந்தினால், உலகத்து சின்னத்தனங்கள் எல்லாம் மறந்து போகும். சுகமான சிந்தனைகள் பிறக்கும். இந்தச் சிந்தனைகளை காகிதத்திலை வடிச்சு வைச்சிட்டு, போதை தெளிந்த பின் எடுத்துப் படிக்கேக்கை எனக்கே ஆச்சரியம் வரும். இதுகளை நான்தான் எழுதினனா எண்டு.

எனக்கு போதை தருவன சிந்தனைகள்தான். மதுவல்ல. சிந்தனைகளைக் கிளறுவதற்கு மது ஓர் ஆரம்பத்தூண்டி அவ்வளவுதான்!

போத்தல் காலியாக காலியா, சிவந்து விரிந்த கண்களுடனும் கன்றிப் பொது பொதுத்த முகத்துடனும், அவன் இன்னும் எவ்வளவோ விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

மீண்டும் மின்னல் வெட்டியடித்தது.

மழை கொட்டோ கொட்டென்று கொட்டியடித்தது.

வர்ணக் குடைகள் எல்லாம், நீலம் பாரித்த ஈரக்காலுடன் கடை வாசல்களில் தவம் கிடந்தன.

அதுவும் ஒரு மழைக்காலத்தில் தான் நடந்தது. மழையில் தொப்பலாக நனைந்து உடைகளை மாற்றிவிட்டு, தலையைத் துவட்டிக்கொண்டிருந்த போதுதான் அவர் வந்தார்.

"தம்பி சந்திரன், பபி இஞ்சாலிப் பக்கம் வந்தவனே"

"இல்லையே. அவனைக் கண்டு இப்ப ஒரு கிழமைக்கு மேலாச்சு" அவரின் நம்பிக்கை ரேகைகள் மாறிப் போயின.

"ரெண்டு நாளாய் ஆளைக் காணேல்லைத் தம்பி, எங்கே போனான் எண்டும் தெரியேல்லை. தாய்க்காறி தண்ணி வென்னி இல்லாமல் குளறிக் கொண்டிருக்கிறாள்" அவரின் இமை ஓரங்களில் ஈரம் கசிய நாத்தளுதளுத்தது.

மோட்டார் சைக்கிளை உதைத்து கிளப்பி, அந்தக் கொட்டும் மழையிலும் நண்பர்கள் வீடேல்லாம் விசாரித்து களைத்த போது தான் பபி போன மர்மம் புரிந்தது.

குமுறி அழுகின்ற அந்த பெற்ற தாய்க்கு எவ்வாறு ஆறுதல் சொல்வது எனத் தெரியாமல் தவித்து, ஆறுதல் சொல்கிறேன் எனக் கூடவே அழுது, உடலும், மனதும் அக்கக்காக கழன்றுவிட வீடுவந்து குப்புறப்படுத்தான்.

அதற்குப் பின் பபியைப் பற்றி எந்தச் சேதியும் கிடைக்வில்லை. உனக்காக ஒரு நாளாவது வாழ்ந்து பார் என உபதேசம் செய்தவன். துப்பாக்கியை தோளில் மாட்டிக் கொண்டு முழுத் தமிழர்களுக்கு பாடுபடப் போய்விட்டான்.

மழை இப்போது வெளித்து விட்டது. ரோட்டில் சனங்கள் உலாவத் தொடங்கி விட்டார்கள். அவனுக்குரிய மினிபஸ் வந்தது.

ஏறி உட்கார்ந்தான்.

வாகன ஜன்னல் ஓரத்து இருக்கை. ஜன்னலை அகலத் திறந்துவிட்டான். குளிர்காற்று முகத்தில் சீறியடிக்க பஸ் புறப்பட்டது. எவ்வித அழுக்குகளும் இல்லாத ரோட்டு, புதுப்பாய் போன்று பளிச்சென்று இருந்தது.

மரங்களின் இலைகளில் அசிங்கமாக படிந்திருந்த தூசிகள் எல்லாம் மழை நீரால் கழுவப்பட்டு, அவை பண்டிகைக் காலத்தில் புத்தாடை தரித்த சிறுமியர் போலக் காணப்பட்டன. இன்று மிகவும் சந்தோசமாக இருப்பது போல் அவனுக்குப்பட்டது. அவனது நண்பன் ரவி மழைக்காலம் சோகமானது என்று சொன்னது நினைவில் வர ஒருமுறை சிரித்துக்கொண்டான்.

"நேரம் கூடி வந்தவேளை - நீ நெஞ்சை மூடி வைத்த கோழை" பஸ்சில் ஒலித்த சினிமாப் பாடலுக்கு எல்லாம் புதுப்புது அர்த்தம் பிறந்தது அவனுக்கு.

"தம்பி இறக்கம்" கொண்டக்டர் பெடியனிடம் காசைக் கொடுத்து மிகுதி சில்லறைகளை வாங்கிக் கொண்டு பஸ்சால மெல்ல இறங்கினான்.

பையை தோளில் மாட்டிக்கொண்டு தலையை கையால் கோதிக்கொண்டு நடக்க ஆரம்பிக்கையில் தான், எதிர்ப்பக்க மதலில் ஒட்டி இருந்த அந்த மூவர்ண சுவரொட்டி எதேச்சையாக கண்ணில் பட திடுக்குற்று உற்றுப் பார்த்தான்.

நெஞ்சைக் கப்பென ஏதோ கவ்விப் பிடிக்க, அடிவயிற்றில் இருந்து துக்கம் அலை அலையாக கிளம்பி தொண்டையை அடைத்தது.

கால்களில் பலம் எல்லாம் திடீர் எனப் பூமிக்குள் பாய்ந்து விட்டால் போல் துவண்டு சோர்ந்தன.

'நண்பனே எனக்காக அழ வேண்டாம் ! எனது இழப்பு உன் மனதில் ஆழமாக ஆயிரம் ஆயிரம் உறுதி விழுதுகளை வேர்பாச்சி என் கனவுகளை நனவாக்கும் என்றால் அதுவே நான் பெறப்போகும் சுவர்க்க வாழ்வாகும்.

எனக்காக அழவேண்டாம் நண்பா!

சிரி! சிரித்தபடியே! விடைகொடு!

என்ற மனதைத் தொடும் வாசகங்களுடன், கோல உடையில் தோளில் துப்பாக்கி தொங்க, இடுப்பில் இரவைப் பட்டிகளுடன் ஓர் கம்பீரச் சிரிப்புடன் பபி அந்தச் சுவரொட்டியில் இருந்தான். கண்களில் வெற்றியின் களிப்பும், அஞ்சாமையும் இறுமாப்பும் தெரிந்தன.

"இது எப்போது நடந்தது ?"

உத்தியாக வாழ்க்கை என்னை இவ்வளவு தூரம் அன்னியப்படுத்தி விட்டதா?

*ஓ! என் இனிய நண்பா!*

*உனக்காக வாழ் என உபதேசித்த நீ எமக்காக உன் வசந்த காலங்களைத் துறந்து இறுதியில் உன்னையும் இழந்து விட்டாயா? பச்ச தாபக் கேள்விகள் அலை அலையாக உதித்து வர தொய்ந்து போய் வீட்டை நோக்கி நடந்தான்.*

*கதவைத் தட்டியதும், கடைசித் தங்கை வந்து கதவைத் திறந்தாள். எந்தவித முன்னறிவித்தலும் இல்லாமல் திடீர் என வந்திருக்கிற இவனைக் கண்ட பரவசத்துடன் 'அம்மோய் அண்ணை வந்திட்டார்' என்று உரத்துக் கத்தியபடி பையை வாங்கினாள். வாங்கியவள், சிறிது நின்று நிதானித்து மூக்குத் துவாரங்களை அகல விரித்து சூழல் வாசனைகளை உள்வாங்கி, பின் மூக்கை நெகிழ்த்து "என்னை சிகரற் மணக்குது" என்றாள்.*

*மனதும், உடலும் சோர்ந்திருந்த அவன், அக்கேள்வியால் எரிச்சலுற்று "சிகரற் குடிச்சனான் தான். இப்ப என்ன செய்யப் போறாய்?" என்றவாறே அவளிடம் இருந்த பையை வெடுக்கெனப் பறித்தவாறே உள் நுழைந்தான்.*

*"அம்மா அண்ணை சிகரற் குடிச்சிருக்குது. மணக்குது" அவனின் நிலை புரியாதவளாய் குறும்பு கொப்பளிக்க உள்நோக்கி கத்தினாள் தங்கை.*

*துயரும், பலகீனமும் காரணம் புரியாத ஆத்திரமும் அவன் உள்ளத்தில் எங்கோ உறங்கிக் கிடந்த மிருகத்தை உசுப்பிவிட அது சிலிர்த்தெழுந்தது.*

*விழிகள் பிதுங்கி வெளியே வர, பற்களை நெருமியவாறே அவள் பின்னலைப் பிடித்து 'பளீர்' எனக் கன்னத்தில் அறைந்தான்.*

*"நான் சிகரற் மட்டுமில்லை, சாராயமும் குடிப்பன். உன்ரை காசிலையாடி குடிக்கிறன்" மீண்டும் ஓர் அறை வைத்தான்.*

*"தம்பியே" எனச் சந்தோசத்துடன் கேட்டவாறு வந்த தாய் இங்கே நடக்ம் பிரளயத்தைக் கண்டு அதிர்ந்தவளாக அவனுக்கும் மகளுக்கும் குறுக்கே நின்று கொண்டு "இப்ப என்ன சொல்லிப் போட்டாள் எண்டு வந்ததும் வராததுமாய் அவளுக்கு போட்டடிக்கிறாய்"*

*"அடிக்கிறதோ, துண்டு துண்டாய் வெட்டுவன் !"*

*இருபத்தெட்டு வயசாய் போச்சு ஒரு சிகரற் குடிக்கிறதுக்குக்கூட எனக்கு சுதந்திரம் இல்லையோ?*

*அப்பாவுக்குப் பயம்! உங்களுக்குப் பயம்! இப்ப என்னைவிட எட்டு வயது குறைஞ்ச இவளுக்கு கூட பயப்பட வேண்டி இருக்குது. இதுக்கெல்லாம் நீங்கள்தான் காரணம்!*

*பெருந்தன்மை, கௌரவம் எண்டு, போறவாறவனுக் கெல்லாம் பயப்படுகிற கோழையாய் என்னை வளத்து விட்டது நீங்கள்தான். வெறிபிடித்த விலங்கைப் போல் கத்தியபடி பையை கழற்றி எறிந்தான். கதிரையை உதைத்து வீழ்த்தினான்.*

*"ஒரு சிகரற் பத்திறதுக்கு கூட இந்த வயதிலையும் உங்களுக்குப் பயப்பட வேண்டி இருக்கு. இப்ப பாத்துக் கொண்டிருங்கோ உங்கள் எல்லாருக்கும் முன்னாலை பத்தப் போறன். ஒழிச்சொழிச்சு பத்தேல்லை. எல்லாரும் பார்க்கத்தான் பத்தப்போறன்".*

*தூக்கி எறிந்த பையை எடுத்து, அதன் ஓரத்துப் பையைத் திறந்து பெட்டியால் சிகரற் ஒன்றை உருவி உதட்டில் பொருத்தி நெருப்புக் குச்சி கிழித்தான்.*

*கைகள் நடுங்கின! கதிரையில் கால்களை நன்றாக நீட்டி அமெரிக்கையாக அமர்ந்து விஷமத்திற்காக சிகரற்றை அவசரம் அவசரமாக இழுத்து புகையை குப்பு குப்பு என்று ஊதினான்! முழுக் குடும்பமுமே*

இவனின் திடீர் மாற்றத்திற்குக் காரணம் புரியாமல் திகைத்து நின்றது.

இவன் இப்படி மரியாதையீனமாக அட்டகாசமாக புகைப்பதைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தால் அதை ஆமோதிப்பது போலாகிவிம் என்பதாலோ அல்லது அங்கே நிலவிய இறுக்கமான சூழலை தளர்த்த நினைத்தோ தாய் “சரி சரி ஈர உடுப்பைக் கழட்டி தலையைத் துடை, நான் கோப்பி கொண்டு வாறன்” என்றவாறு குசினியை நோக்கிச் சென்றாள்.

“எனக்கு ஒரு மண்ணாங் கட்டியும் வேண்டாம்” எனக் கத்தியபடி பாதிச் சிகரற்றை கீழே போட்டு சப்பாத்தால் நசித்தான்.

கண்கள் சிவந்து விழியோரங்களில் நீர் கட்டியது.

“கோழைகள் தான் அழுவார்கள். யெஸ் யூ ஆர் எ கவேர்ட்” பபி கூறுவது போல் கேட்டது.

“எழுத்திலை மாத்திரம் தான் பெண் விடுதலை. வீட்டிலை தலைகீழ்” அழுது ஓய்ந்த தங்கை புறுபுறுத்தவாறு போனாள். இவன் மீண்டும் வெறி கொண்டான்.

“யேஸ் யூ ஆர் ஏ கவேர்ட் கோழைகட்குத்தான் காரணம் இல்லாது ‘குபக்’ என ஆத்திரம் வரும்” - மீண்டும் பபி தோன்றினான்.

இவன் தன்னை அடக்க கண்ணீர் தழும்பி விழும்போல் இருந்தது.

தான் அழுவதை யாரும் பார்த்து விடக்கூடாது என்பதற்காக அழுக்குச் சப்பாத்தைக் கூட கழற்றாமல் கட்டிலில் குப்புற விழுந்தான். நெஞ்சு விம்மி விம்மித் தணிந்தது.

கரகர எனக் கண்ணீர் சுரந்தது. தலையணையை ஈரமாக்கியது.

“அழாதே நண்பா”

“எனக்காக நீ அழ வேண்டாம் !” - மூடிய கண்களுக்குள் பபி வந்து இவன் முதுகைத் தட்டிக் கொடுத்தான். அடி வயிற்றில் இருந்து கேவல் ஒன்று கிழம்ப தலையணையை இறுக்கமாகக் கட்டிப் பிடித்தான்.

வெளியே மழை குமுறிப் பெய்தது!

நன்றி: வீரகேசரி (சித்திரை 1987)

● அ.லில்லி ஏஞ்சல்ஸ்..

## மழைவிடும் தூது!

நேற்றைய நாள்முதல் மையம்
கொண்ட ஊடற்புயலை...
கணத்தில்
வலுவிழக்கச் செய்துவிடுகிறது...
இந்த மழை.....
“உம்“மென்றிருந்த நம் இருவரின்
மௌனத்தை ஓரிரு
வார்த்தைகளில் மொழிபெயர்த்து
உற்சாகம் கொள்கிறது....
சிறு தூரலெனத் தொடங்கிய....
நேசமழை...அங்கொன்றும்
இங்கொன்றுமாய் துறலிட்டுப்
பின்....
பெருமழையின் பிரவாகமாய்
திக்குமுக்காடவைத்து.......
தொடங்கியது எப்போது என
கணிக்குமுன் காதல்
பெருங்கடலில் தடாலடியாக
நமை
தள்ளிவிட்டு... வேடிக்கைப்
பார்க்கிறது இந்த காலம்!
சூடாவது.... சொரணையாவது
.கூடுவிட்டு கூடுபாய்ந்து.....
சூடேற்றிக் கொள்கிறது
குளிர்விடங்கள்....
முடிவில்
தெப்பலான வியர்வையில்
கரைந்து விடுகிறது.....
வீராப்பும்
வீம்பும் ..
தலைக்கனமும்...

● த. நரேஸ நியூட்டன்

## களவு

இருட்டில் கதிரவனிடம்
ஒளியைக் களவெடுத்து
பகல் வெளிச்சத்தில்
மறைந்துவிடுகிறாள் நிலா மகள்

## பிச்சை

அவன் பட்டதாரியாகிறான்
தெரு விளக்கு
ஒளியைப் பிச்சையிட்டதால்

## மேகக் கூட்டங்கள்

ஆடுவதும் ஓடுவதும் உருள்வதுமாக
தமக்குள் குதூகல்த்துக்கொண்டு
நகர்கின்றன் மேகக் கூட்டங்கள்

## அவள் நினைவுகள்

வருடலும் தடவலும்
உரசலும் என்று
அவள் நினைவுகளை
மீட்டிச் செல்கிறது தென்றல்

## வாழ்க்கை

காலை எழுவதும்
பகலில் உழைப்பதும்
இரவில் தூங்கவதுமாக
வாழ்க்கை

## புத்தகங்கள்

கருத்துச் சொல்லும் மனிதர்கள்
நல்ல கருத்துக்களை
தரும் புத்தகங்கள்
பின்னையதில் சுயநலம் காணலரிது

## சுமை

உனக்காய் ஈன்றவளுக்கு பின்
முன்பே உன்னை ஈன்றவள்
சுமையாகிவிடுகிறாள் உனக்கு

## இரக்கம்

வாசலிலே நீண்ட காலமாய்
கலயத்தோடு காவலிருப்போர்
ஏனோ இன்னமும்
இரக்கம் பெறவில்லை

## ஊடல்

வண்டுகளின் ஊடல்
மலர்களும் எதிர்பின்றி
சொரிந்தன மதன நீர்

## பெண் அடிமை


விடுதலை வேண்டும்
சம உரிமை வேண்டும்
பெண்கள் போராட்டம்
எப்போது விலங்கிடப்பட்டோம்
எப்போது உரிமை மறுக்கப்பட்டோம்

● பிரேமா இரவிச்சந்திரன்
சென்னை.

# அகிலா கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ‘தூர். சிறுகதைத்தொகுதி

“தூர்” எனும் இச்சிறுகதைத் தொகுப்பு நூலைப் பற்றி பேசுவதற்கு முன்பு இந்த நூலின் ஆசிரியர் தஞ்சை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பற்றியே முதலில் பேசத் தோன்றுகிறது. இத் தொகுப்பிலுள்ள பத்து கதைகளையும் பெண்ணின் பார்வையிலிருந்து, எனும் அடையாளமில்லாமல், பாலினப் பாகுபாடின்றி, பொதுவானப் பார்வையில் நிகழ் காலச் சம்பவங்களை நேரடியாகக் கதைகளாக்கியிருக்கிறார். இக்கதைகளில் நிகழ்வுகளோடு மக்களின் எதிர்பார்ப்புகளையும், தீர்க்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார். தனது உறுதியான வெளிப்பாட்டை எப்படி இவரால் மென்மையாக, எதிர்கருத்து கொண்டோரும் ஏற்கும்படியாக, கடத்த முடிகிறதென வியக்க வைக்கின்றன ஒவ்வொரு கதைகளும். அவரது மென்மையான குணமும், ஆழமான அன்பும், சமூகத்தில் தூர்வார வேண்டிய இடங்களில் அவரது ஆர்ப்பாட்டமில்லாத போர்க்குணமும் அழகாக ஒவ்வொரு கதைகளிலும் வெளிப்படுகிறது. வாசிப்பவருக்குள் ஆழ்ந்து உள்நுழைந்து சிம்மாசனமிட்டுக் கொள்கிறது. இந்நூலின் தலைப்பான “தூர்” என்ற சொல்லைக் கூட அவர் எங்கும் பயன்படுத்தவில்லை. இறுதிக் கதையில், “மஞ்சள் தடவிய வேப்பம் தூரில் கோர்த்திருந்த ஈரம்போல், அப்பாவின் கைகளை மிதிலா இறுகக் கோர்த்துக் கொண்டாள்” என “அடிமரம்“ எனும் பொருளில் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்.

முதல் கதையில், யானை கட்டிப் போரடித்த தஞ்சை மண்ணில் தற்போது பெய்யும் மழை, வான் சிறப்பில் வள்ளுவன் குறிப்பிடும் மழையாக இல்லாமல், வெள்ளாமைக்கு கூட வந்து சேராத, சாக்கடை நீரைத் துரத்தி துப்புரவுப் பணியை மேற்கொள்ளும் மழையாக மாறிப் போனதையும், அவ்வாறான தேவையும் இருப்பதை, நிகழ்கால சாட்சியாக இக்கதையில் நிறுத்தியிருக்கிறார். ரயிலின் வருகைக்காகக் காத்திருக்கும் கணப்பொழுதில் பெய்த மழையை, மிகக் கனமானக் கருத்துக்களைக் கொண்ட கதையாக மாற்றி களம் கண்டிருக்கிறார். இயற்கையின் எதிரிகள் தானே நாம்? அதனை எதிர்ப்பே இல்லாமல் நம்மை ஏற்க வைத்திருக்கிறார். மலையை வெட்டி, மரத்தை வெட்டி, ஆற்றைச் சுரண்டி, மண் செரிக்காத விஷமான பிளாஸ்டிக்கை பயன்படுத்தி முன்னேறிக் கொண்டிருக்கும் நம்மைப்பற்றி அழுத்தமாக பேசியிருக்கிறார். அத்தனையும் மீறி, “அக்கறை கொண்டவர்கள் அதிகாரத்துக்கு முன்னால் சல்லிக் காசுக்கு பொறமாட்டார்கள். பணம் சம்பாதித்தவர் மேல் இருக்கும் பயம், ஒரு நல்லவன் மேல் இருப்பதில்லை. தவறுகளை உணருகிற அத்தனைபேரும் கடவுள்கள் தான்”. போன்ற வரிகளெல்லாம் விழிக்கச் செய்கின்றன.




அடுத்து அடுத்து வரும் கதைகளில் நம் நிலத்தின் அடையாளம் சார்ந்த பதிவுகளும், நிகழ்கால பழக்கவழக்கங்களும், நிறையவே இடம் பெற்றிருக்கின்றன. “சரக்கொன்றை மலர்போல், மரமேறிக் கெண்டையை போல், போன்ற மண் மணம் கொண்ட, கதையில் மாறா பொருள் கொண்ட மொழிபெயர்ப்பிற்கு சவாலான சொற்களும் இடம் பெற்றிருக்கின்றன. “ஃபாரின் அப்பா” எனும் கதையின் கருவில் தனக்குப் பொருந்தாத கணவனை, தன் விருப்பத்திற்கு தேர்ந்தெடுத்தப் பெண், தன் தந்தையின் அறிவுரையைக் கேளாமல் சிக்கலில் தவித்து, தன் மகளின் திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் வரை, அப்படியே வாழ்கிறார். அன்னை தன்னிடம் மறைத்து வைத்து வாழ்ந்து வந்த துன்பங்களை வளர்ந்த மகள் அறிந்த பொழுது, விவாகத்திலிருந்து விடுப்பு ஒன்றே விடுதலை எனும் முடிவினை அன்னைக்கு அறிவுறுத்துவதும் ஏற்கும்படியாகவே இருக்கிறது.

“நிலா வாசம்“ எனும் கதையில், “நிலவின் முன்பு தன் கண்களை இறுக மூடிக்கொண்டு நமக்கு பிடித்தமானவர்களை மனதில் நினைத்து, மெல்லத் திறந்து பார்த்தால், நிலாவில் அவர்களது உருவமும் வாசமும் நம் கண் முன்னே வந்து நிற்கும்“. என நிலா வாசம் பிடிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார். நெருக்கமான உறவுகளை இழந்தவர்கள் ஆறுதல் தேடுவது இயற்கையிடம்தான். பொறுத்தார் பூமி ஆள்வார் என்றாலும் நமது இயற்கையின் மீதான விதிமீறல்களை பொறுத்துக் கொள்வது என்னவோ பூமிதான். இயற்கையை மட்டுமே வழிபட்டு வழிவழியாக வந்திருந்தோமெனில் தற்போது பால்நிலாவின் மீது கரும்புகையைப் பூசி பௌர்ணமியை அமாவாசையாக மாற்றம் கொள்ளச் செய்வதெல்லாம் நடந்திருக்காதுதான். எத்தனைக் கொடுமை செய்யினும் பூமி தன்னை மீண்டும் மீண்டும் புதுப்பித்துக் கொண்டு பொறுமையைக் கையாளுகிறது. வெடிக்கும் நாள் எந்நாளோ? அதற்கு முன் நாம் விழிக்க வேண்டும்.

மற்றுமொரு கதையில், குழந்தைகளின் கனவினை பூர்த்தி செய்கிறேனென்று அவர்களை காப்பகத்தில் விட்டுவிட்டு பொருளீட்டச் செல்லும் பெற்றோர்களே அறியாத குழந்தைகளின் மனதை, உட்புகுந்து அறிந்திருக்கிறார். காற்றிலே கரைந்து போகும் குழந்தைகளின் எதிர்பார்ப்பை கதையாக வடித்திருக்கிறார். "அன்பெனப்படுவது" என்னும் கதையில் தன் விருப்பத்திற்கு இடம் கிடைக்காத ஆடம்பர வாழ்க்கையையும் சிறையென உணரும் பெண், தன்னை விடுவித்துக் கொள்ள, "வல்லமை தாராயோ" எனும் பாரதியின் வரிகளையே நாடுகிறாள். கணவனின் அன்பில் அடங்கியிருக்கும் பெண்ணுக்கு தன் அன்னையை காண்பதற்கு கூட கணவனின் அன்பை உடைத்தெறிந்து வெளியே வர வலியைத் தாங்கும் வலிமை தேவைப்படுகிறது. சிறப்பாக சொல்லியிருக்கிறார்.

தஞ்சையின் வட்டார மொழியை பெரும்பாலான கதைகளில் அதிகமாகப் பயன்படுத்தியும், ஆங்காங்கே சில சொலவடைகளை இடத்திற்கு ஏற்றார்போல் சொல்லியும், கரிசல் காட்டுப் புதல்வன் எழுத்தாளர் கி. ராஜநாராயணன் கதைகள் போல, தஞ்சையின் மண்ணைச் சுமந்து கதைகளில் மணக்கச் செய்திருக்கிறார். தமிழிலேயே இதுவரை இல்லாத வரியாக "அல்லியம்மா அரச்ச மருந்து" என்னும் கதையில், "உசுரோட சாகுற ஆம்பளையோட விதவத் தொயரத்த" எனும் வரியில் "விதவைத் துயரம்" எனும் சொல்லை ஒரு ஆணுக்கு பயன்படுத்தியிருக்கிறார். "கோப்பிரியா" எனும் மற்றுமொரு கதையில், பெண்ணானவள் புகுந்த வீட்டு சகல சங்கதிகளையும் தாய் வீட்டில் பகிரக் கூடாது எனும் பழங்கால அறிவுரைகளை, நிகழ்கால ஆண் கடைபிடித்து, தன் மனைவியின் மீதான கருத்து வேறுபாட்டில் சில மாதங்கள் பிரிந்து வாழும் கணவன், அதனை தன் பெற்றோரிடம் மறைத்து வாழும் போது, அதுவே அவர்கள் மீண்டும் இணைந்து வாழ்வதற்கு வழியாகவும் அமைகிறது. மாறி வரும் காலச் சூழலுக்கேற்ப கடைபிடிக்கவேண்டிய புதிய கலாச்சாரங்களைக் கதைகளில் சொல்லிச் செல்கிறார்.

"பறத்தலின் சப்தம்" எனும் கதையில் தன் மகளை மருத்துவராக்கும் கனவிலிருக்கும் பெற்றோருக்கு, அக்கனவை நிறைவேற்ற தடையாக நிற்கும் நீட் தேர்வை, மகள் வசுமதியால் எதிர்கொள்ள இயலாமையைப் பற்றிப் பேசுகிறது. வீட்டிலிருந்து படிக்கும் இக்கதையின் நாயகி வசுமதிக்கு பேசிக்கொள்ள, தான் வளர்த்த மல்லிகைச் செடி யாவது காது கொடுக்கிறது. விடுதியில் தங்கிப் படிக்கும் உண்மை வசுமதிகளுக்கு அவ்வசதியும் இல்லை. புறக்கணிப்பு ஒன்றே புத்திசாலித்தனம் எனும் இக்கதையின் முடிவு, நமது இயற்கை மருத்துவம் ஓங்கி வளர்ந்தால், சிறப்பாக இருக்குமென எண்ண வைக்கிறது.

.

"தூர்" எனும் இறுதிக் கதையில், தந்தையின் சிதைக்கு கொள்ளி வைக்கப் பிறந்த மகன், வாழும் போதே மனதில் கொள்ளி வைக்க, அசையாத சொத்துக்களை உதறித் தள்ளிய மகளைப் பெற்ற தந்தையாக, தன் இறுதிக் காலத்தை மகளுடன் கழிக்கும் பாக்கியசாலியாகிறார். "பெண்கள் மூட்டும் சவத்தீயும் பற்றி எரியும்" எனும் வரியில் முடியும் இந்நூல் நம் மனதையும் பற்றிக் கொள்கிறது. தான் கடந்து போன ஒவ்வொரு சம்பவங்களையும் கதைகளாக்கி சப்தமில்லாத யுத்தத்தைத் தொடுத்திருக்கிறார் இந்த நூலின் ஆசிரியர் அகிலா கிருஷ்ணமூர்த்தி. வாசிக்க வேண்டிய சிறப்பான நூல்.

நூலின் பெயர்: தூர்

ஆசிரியர் : எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி

பதிப்பகம் : முடிவிலி வெளியீடு

நூலின் வகை : சிறுகதைத் தொகுப்பு

பக்கங்கள் : 120

விலை : 125

Dr ஜலீலா முஸம்மில்

# திராட்சை ரசம்...

இந்த வைகறையின்
அமைதிதான் எத்தனை அழகானது..
ஏகாந்தத்தின் பொழுதுகளில்
புலரும் காலைப் பொழுது..
சுறுசுறுப்பின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பாய்..
கூடுவிட்டகலும் பறவைகள்..
கீச்சிட்டுக் கவிபாடும் புள்ளினங்கள்...
ஒவ்வொரு நாளும்
புதிய வரவாய்ப்
புத்தொளி பரவும்
காலைக் கதிரவன்...
சுளீரென்று பாயும்
செந்நிறக் கதிர்கள்...
மரங்களின் இலைகளில் பனித்துளிகள்...
தலையாட்டிச் சிரிக்கும் கிளை நுனிகள்...
கிள்ளை மொழியின் வீச்சுகள்...
பட்டுப்புறாக்களின் அகவல்கள்..
தென்றல் காற்றின் அசைவில்
சிதறும் பனிக்குடங்கள்...
பனித்துளிகளில் குளிக்கும்
மலர்ப்பறவையின் சிறகுகள்..
எத்தனை வகையான
இன்னிசைகள்...
இறைவனின் மொழிகளோ
இவை?
இயற்கையின் ஆலாபனைகளோ
இவை?
பிரக்ஞையில் திராட்சை ரசமோ?
ஊறி வரும் உற்சாகமோ?
ஏ மனிதமே...
உறக்கம் கலைத்து விடு..
உன்னத காலை நேரத்தை உள்வாங்க உயிர்
கொண்டெழு...
அந்தகார இருள் விரட்டும்
ஆயிரம் ஒளிக்கைகள்...
உன்னைத் தீண்டச்
சந்தர்ப்பம் கொடு...
சீதோஷ்ணக் காற்றின்
ஸ்பரிசம் உணர்ந்து கொள்...
பறவைகளின் சொல்லாடல் புரிந்துகொள்...
பரிச்சயமாகு...
சிந்தனையைத் தட்டி எழுப்பு..
நெஞ்சத்திலே
ஆரவாரமின்றிய
ஆகர்ஷ சாந்தத்தைக் குடியிருத்து..
சாந்தியை நிலைநிறுத்து...
சப்தங்கள் சந்தம் பாடும்,
தொனிகள் சிம்பொனிகளாகும்,
காலையோடு காதல் கொள்..
கவலை மற..
மழைச் சாரலாய்
முகம் நனைக்கும்
தூறலாய்
மகிழ்ச்சி கொள்....
மனதிலே விடியலின் பரிணாமத்தை அச்சிடு...
மெச்சிடு...
சௌந்தர்யங்கள் குடிகொண்ட
யௌவனங்களின்
ஒட்டுமொத்த சிருஷ்டிப்பை விடாய்த்த
மழலையாகக் குடி...
விடலைச் சிறுமியாக மாறு...
விடாது பரவசம் அடை...

● நௌஷாத் கான் லி
(அபுதாபி)



# மூன்றாம் உலகத்தில் கடவுள்

*பூமி கிரகத்தின் இரண்டாம் உலகம் அது.அந்த உலகத்தில் பல நாடுகள் உள்ளன..அந்த கிரகத்தில் உள்ள அழகிய சிறிய நாடு தான் சந்தியா நாடு.இரு நூறு ஆண்டுகள் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு பல போராட்டங்களுக்கு பிறகு மக்களாட்சி அங்கு நிலவுகிறது.*

*வருடம் 2150 ஆறாம் தலைமுறை மக்களாட்சி.ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த நாட்டில் எலெக்சன் வரும். அந்த நாட்டில் கட்சிகள் புதிது புதிதாய் முளைத்தாலும் எப்பவும் மக்களின்*

அபிமானத்தை பெற்றது அந்த ரெண்டு கட்சிகள் மட்டுமே.

ஒன்று கொள்ளுப் பேரன் கட்சி-மற்றொன்று கொள்ளுப் பேத்தி கட்சி .

ரெண்டு கட்சிகளுக்குள்ளும் எப்போதும் போட்டா போட்டி தான் போட்டுக் கொள்ளும். ஒரு முறை கொள்ளுப் பேரன் கட்சி ஜெயித்தால் மறுமுறை கொள்ளுப் பேத்தி கட்சிதான் ஜெயிக்கும் .இப்படி மாறி ,மாறி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த கட்சிகள் ஆட்சியை பிடித்தன .

மக்களும் இந்த ரெண்டு கட்சியை தவிர மாற்றாகவோ, புதியதாகவோ வேறு ஒரு கட்சியை தேர்வு செய்ய வில்லை ஏனென்றால் யாரும் மக்களுக்கு நல்லது செய்யவோ அல்லது நாட்டை வளப்படுத்தவோ வர விரும்பவில்லை .நாட்டின் ஆட்சியை , அதிகாரத்தை பிடிக்க வேண்டும். நாட்டை சூறையாட வேண்டும் அவ்வளவு தான் இந்த கேடுகெட்ட அரசியல் கட்சி தலைமைகளின் மனநிலை.

இங்கு கட்சி மாறினாலும் காட்சி மாறாது என்பதை உணர்ந்த மக்கள் இலவசத்துக்கும் ,ஓட்டளிக்கும் போது கிடைக்கும் பணத்துக்கும் அடிமையாகினர் .தங்கள் வருங்கால சந்ததிகளை பற்றி அவர்கள் கவலை படவே இல்லை .இதனால் தான் எந்த கட்சி தேர்தலில் நின்றாலும் இந்த ரெண்டு கட்சியை தவிர எந்த கட்சியும் ஆட்சியை பிடிக்கவில்லை .

மக்களின் அபிமானத்தை பிடித்த கொள்ளுப் பேரன்-கொள்ளுப் பேத்தி கட்சிகள் மட்டும் நல்ல கட்சிகளா என்ன ?

இருப்பதிலேயே நிறைய கேடி பசங்க வாழும் கட்சி அது மக்களுக்கு வேறு வழி இல்லை.

இங்கு எவனாவது பாமரன் வாய் திறந்தா கஞ்சா கேசு?

தட்டி கேட்ட தடா கேசு?

நியாயத்துக்காக போராட்டம் பண்ணா பொடா கேசு?

கூட்டம் கூடுன்னா குற்றவாளி மாதிரி என்கவுண்ட்டர் ??

குடிக்கிற தர்தலை நாய்களுக்கு கிடைக்கிற மரியாதை நல்ல சாமானியனுக்கு இந்த நாட்டில் கிடைப்பதில்லை

இப்படி இருக்கிற அந்த நாட்டில் எவனாவது நியாயம் கேட்குறேன் ,உரிமை கேட்குறேன்னு வாய திறப்பானா ???

மன்னர் ஆட்சியில் கூட இவ்வளவு அக்கிரமங்கள் நடந்து இருக்காது.மக்களை எப்போதும் சிந்திக்கவே விடாமல் இருக்க வீதிகள் முழுக்க மதுபான கடைகள் ,ஆனால் நோய்கள் வந்தால் ஒருவரின் கதி அதோகதி தான் ஏனெனில் மக்கள் சீக்குக்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவமனைகள் எல்லாம் மக்களை வெறும் பணம் எடுக்கும் ஏ .டி.எம் மெஷின்களாக பார்த்தனர் .ஒரு காலத்தில் நல்லா இருந்த அரசு மருத்துவமனைகளை தரம் குறைவாக்கி மக்கள் மத்தியில் அரசு மருத்துவமனைகள் பற்றி ஒரு பயத்தை ஏற்படுத்தி ,மக்களின் வருகையை குறைத்து அரசு மருத்துவமனைகளை எல்லாம் தனியாருக்கு அரசே விற்று விட்டது.

அரசு மருத்துவமனைகளை காசு கொடுத்து வாங்கிய தனியார் முதலாளிகள் லாப நோக்கை மட்டும் கருத்தில் கொண்டு மகத்துவமான மருத்துவத்துறையை காசு புழங்கும் மாஃபியாவை போலாக்கி விட்டனர் .

இப்போது காசு இல்லாத ஏழைகளுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சையே கிடையாது .பணம் ,காசு சில பேரிடத்தில் கோடி கணக்கில் இருந்தாலும் நோயாளிகளின் நலனை விட பணத்தையே பெரிதாய் மருத்துவமனைகளின் முதலாளிகள் நினைப்பதால் நவீன மருத்துவம் வளர்ந்திருந்த போதும்

புது புது நோய் வரவும் ,மரணமும் தினம் ,தினம் அதிகமாய் அரங்கேறி கொண்டிருந்தது .

அந்த நாட்டில் நோய் தொற்று காரணமாக பேஸ் மாஸ்க் பயன்பாடும் ,சானிடைசர் பயன்பாடும் அதிகமாக இருந்தது .சிலிண்டரில் அடைத்து வைக்கப்பட்டுள்ள நல்ல ஆக்ஸிஜன் காற்றை பணமுள்ளவன் வாங்கி சுவாசித்து உயிர் வாழ்ந்தான் .காசு இல்லாதவர்களில் சிலர் மாசுபட்ட தீய காற்றை சுவாசித்து மரித்தும் போயிருந்தனர் .

அப்போது தான் அந்த நாட்டில் தேர்தல் வேறு நெருங்கி கொண்டிருந்தது எனவே கொள்ளுப்பேரன் கட்சியும் -கொள்ளுப்பேத்தி கட்சியும் பொதுமக்களுக்கு வியக்கத்தக்க வாக்குறுதிகளை கொடுத்து தேர்தலில் வெற்றி பெற நினைத்தது .

பசியில்லா சமூகத்தை படைக்க பசியால் வாடுவோர்களுக்கு வீடு தேடி மாதந்தோறும் தேவைப்படும் உணவுப்பொருள்கள் அவர்கள் வீட்டிற்க்கே வந்து சமைத்து கொடுக்கப்படும் ,இது பத்தாது என்று மக்களை சோம்பேறியாக்க மாத மாதம் ஐம்பதாயிரம் பாக்கெட் மணி தரப்படும் .வீட்டிற்கு வீடு எல் .சி .டி .டிவி *41* இஞ்ச் வழங்கப்படும் இது பத்தாது என்று குடிமகன்களுக்கு அன்-லிமிட்டட் ஆல்கஹால் ட்ரிங்க்ஸ் வழங்கப்படும் மக்களின் வருங்கால தேவைக்காக ஒவ்வொரு வாக்காளரின் வங்கி கணக்கில் ஐம்பது லட்சம் டெபாசிட் செய்யப்படும் இதனால் நாட்டுக்கு இருபது மில்லியன் கோடி லட்சம் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை.எங்களுக்கு பொது மக்களின் நலனே முக்கியம் எங்களை தேர்தலில் ஜெயிக்க மட்டும் வையுங்கள் இதுவெல்லாம் உங்கள் வாழ்வில் சாத்தியமென்று கொள்ளுப்பேரன் கட்சி தேர்தல் வாக்குறுதி அளித்தது .

இங்க பாருங்க மகா ஜனங்களே ஆட்சியை பிடிச்சா குறைந்தது தொன்னூறாயிரம் ஆயிரம் கோடி மில்லியன் பணத்தை அந்த கட்சி சர்வ சாதாரணமா வரி விதிச்சு கொள்ளையடிக்கும் உங்களுக்கு ஆசை காட்டி மோசம் செய்ய பார்க்குது ,நாங்க ஆட்சிக்கு வந்தா வரிகளை கொஞ்சம் ,கொஞ் சமா குறைப்போம் ,வீட்டுக்கு வீடு மது பான கிணறு உண்டாக்கி தருவோம் ,கடை சரக்கு விரும்பும் குடிமகன்களுக்கு பைப் லைன் அமைத்து வீட்டிற்கே டோர் டெலிவரி செய்யப்படும் .

மக்களுக்கு நல்ல கல்வியறிவு ,மருத்துவ வசதி ,ஒரு வேலைவாய்ப்பு கொடுத்தால் அவர்கள் தேவையை அவர்களே நிறைவேற்றி கொள்வார்கள் அதை விடுத்து இந்த இரண்டு கட்சிகளுமே மக்களை அறிவிலியாக்கி ,சோம்பேறியாக்கி ,குடிக்கு அடிமையாக்கினர் .

ஆளும் கட்சியை எதிர்க்கட்சி குறை சொல்லும் எதிர்க்கட்சியை ஆளும் கட்சி குறை சொல்லும் ஆனா கமிஷன் ,ஆட்டைய போடுறதில் மட்டும் இரண்டு கட்சிகளும் சண்டை போடாமல் பிரித்து கொள்ளும் .

பெரியவர்கள் தான் இலவசத்துக்கும் ,குடிக்கும் அடிமையாகி நாசமா போறாங்கன்னா ,இந்த வயசு பசங்க நடிங்கனுங்க பின்னாடி போய் நாசமா போறானுங்க ,வருஷம் கூடிக்கிட்டே போனாலும் இன்னமும் இந்த கட்-அவுட்டுக்கு பால் ஊத்துற கலாச்சாரமும் ,உன் நடிகன் பெரியவனா ,என் நடிகன் பெரியவனா என்கிற ரசிகர்களின் போட்டாபோட்டி சண்டைகள் இதுவரை ஓய்ந்தபாடில்லை ,இது மட்டுமா அடல்ட் வெப்சைட்டில் போய் கண்டதை பார்ப்பது ,கேம் விளையாடுவது என பொறுப்பே இல்லாமல் இருக்கின்றனர் .ஒரு சில நல்ல இளைஞர்கள் வாய் திறந்தாலும் அவர்களை திறக்க விடாதபடி கண்ட சட்டத்தை போட்டு வாயடைத்து விடுகின்றனர்.

சில பொறுப்புள்ள அதே சமயத்தில் சபல புத்தியுள்ள இளைஞர்களை மடைமாற்ற ஒரு திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாக கொள்ளுப்பேத்தி கட்சி அறிவித்தது அந்த திட்டம் என்னவென்றால் செவ்வாய் கிரகத்தில் வாழும் அழகிய தேவதைகளிடம் பேச உதவ கூடிய சாட்டிலைட் போனை இளைஞர்களுக்கு இலவசமாக தேர்தலுக்கு முன்பே இலவசமாக கொடுப்பது ,தேர்தலில் ஜெயித்த பிறகு செவ்வாய் கிரகத்துக்கும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்க படும் நூறு இளைஞர்களை கூட்டி செல்வது இந்த விஷயத்துக்காகவே அந்த கட்சியை நிறைய இளைஞர்கள் சப்போர்ட் செய்தனர் .

நாட்டில் கற்பழிப்பு ,கொலை ,கொள்ளை அதிகரித்து கொண்டே சென்றது ,புரட்சி செய்ய வேண்டிய இளைஞர்களும் செவ்வாய் கிரகத்தின் அழகிகளிடம் நேரம் செலவு செய்யவே சரியாய் இருந்தது .

இந்த அநீதிகளையெல்லாம் யார் தட்டி கேட்பது என்று அங்குள்ள சில நல்ல பெண்கள் வருத்தப்பட்டனர் கடவுள்கள் எப்போதும் போல் அமைதியாய் கல்லை போல இருந்தனர் எந்த அநீதிக்கும் எதிராகவும் அவர்கள் கோபப்பார்வையை வீசவே இல்லை ஆனால் இந்த அறிவிலி மக்கள் கடவுள்களை பல வகைகளாக பிரித்து சாதி ,மதம் என பெயரிட்டு கடவுள்களின் பெயரால் சண்டையிட்டு கொண்டனர் .

நாடு மாறினாலும் ,கடவுள் மாறினாலும் ,சாதி ,மதம் பெயரில் மாறினாலும் சண்டை சச்சரவுகள் மட்டும் எந்த நாட்டிலும் குறைந்த பாடில்லை .

பொன் விளையும் பூமியெல்லாம் மலடாய் போனது .மலட்டு மண்களில் விளையும் உணவெல்லாம் விஷமாய் மாறியிருந்தது .அந்த நாட்டில் பெரும்பாலும் விளை நிலங்கள் எல்லாம் விலை மனைகளாக மாறி போனதோடு மட்டுமின்றி வீடுகள் எல்லாம் அடுக்கு மாடி குடியிருப்புகளாக மாறி போனது .

எங்கு பார்த்தாலும் மனித வாசம் ,சுவாசிக்க கூட சுத்தமான காற்று இல்லை ,ஒரு காலத்தில் தண்ணீர் மிதமிஞ்சி இருந்தது ,கார்ப்பரேட் வருகையால் பாட்டிலில் அடைத்து விற்றார்கள் இப்போது தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதால் சிலர் தன்னுடைய சிறுநீரையே சுத்தகரித்து குடிக்கின்றனர் இப்போது சில இடங்களில் சுவாசிக்கும் காற்றுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு சுவாசிக்கும் ஆக்ஸிஜன் காற்று சிலிண்டரில் அடைத்து விற்கப்படுகிறது .இந்த நிலைக்கு மூலக் காரணம் பொறுப்பற்ற அரசும் ,அறிவிலியான மக்களும் தான் .

விவசாயம் செய்ய நிலம் இல்லாததால் மொட்டைமாடியில் ,கப்பலிலும் விவசாயம் பார்க்கப்படுகிறது ,மனிதர்கள் நச்சு தன்மையுள்ள உணவு பொருட்களை தின்று ,தின்று சக்தியற்று இருப்பதால் பல நிறுவனங்களில் ரோபோக்கள் தான் பணியாளர்களாக வேலை பார்க்கிறது .

இப்போது பெரும்பாலான மனிதர்கள் சோம்பேறிகளாக ,மது போதை அடிமைக்காரர்களாக இருப்பதால் ,தேர்தல் வந்தால் ஓட்டுக்கு மட்டும் தேவைப்படும் வெற்று உடலில் உயிருள்ள வெறும் பிண்டங்களாக மட்டுமே பயன்படுகின்றனர் .சேற்றில் முளைத்த செந்தாமரையாக சில நல்ல மக்கள் இருந்தாலும் அவர்களெல்லாம் ஆங்காங்கே சிதறி கிடக்கின்றனர் .

மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்ததற்கு முக்கிய காரணம் கார்ப்பரேட் கம்பெனியும் ,அதற்க்கு சப்போர்ட் செய்கிற அரசும் தான் .தட்டி கேள்வி கேட்க உரிமை உள்ள எதிர்க்கட்சிகளும் சம பங்கு கமிஷன் வாங்கி கொண்டு வாய் பொத்தி நிக்கும் .வெளிப்பார்வைக்கு மட்டுமே எதிர் ,எதிர் துருவங்களாக வெறுமனே காட்சியளிக்கும் .

என்ன தான் இன்னல் அனுபவித்தாலும் தேர்தல் சமயத்தில் பணமும் ,இலவசமும் பெற்றுக்கொண்டு தப்பானவர்களையே ஆட்சியாளர்களாக மக்கள் தேர்நதெடுத்தனர் .

ஏமாற நாம் இருக்கும் வரை அவர்கள் ஏமாற்றி கொண்டு தான் இருப்பார்கள் .இங்கு தீமை மட்டுமே செய்ய நல்லவனை காலி செய்தால் போதும் அதனால் தான் எதிர்த்து கேள்வி கேட்டவனை பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளினர் ,அதிக தொல்லையாக நினைத்தவர்களை ஜெயிலேயே கருவறுத்து தற்கொலை நாடகம் நடத்தினார்கள் .கொள்ளு பேரன் கட்சி ,கொள்ளுப்பேத்தி கட்சி என்று ஆட்சி மாறினாலும் அந்த காட்சி மட்டும் மாறவே இல்லை .

இப்போது இந்த இரண்டு கட்சிகளின் முக்கிய குறிக்கோள் மில்லியன் ,மில்லியனாக கொள்ளை அடித்து கடலுக்கு அடியிலும் ,சந்திரனிலும் இடங்களை வாங்கி முதலீடு செய்வது .பூமி போல அங்கேயும் பல நிதி நிறுவனங்களை உருவாக்குவது அவர்களின் முக்கிய திட்டமாக இருந்தது ஏனென்றால் விரைவில் இந்த பூமி மனிதர்கள் வாழ தகுதியற்றதாக மாறி விடும் .

இப்போது சந்திரனில் வீடுகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ,தொழிற்சாலைகள் கட்டும் திட்டத்தையும் கடலுக்கு அடியிலும் இதே திட்டத்தை மக்களுக்காக செயல்படுவது போல் செயல்படுத்தி கோடி மில்லியன் கோடி கொள்ளை அடிப்பதே இந்த இரு கட்சிகளின் இப்போதைய திட்டம் இதற்கிடையில் இந்த பாழாய் போன தேர்தல் வேறு வந்து விட்டதால் இந்த சனியன் பிடிச்ச மக்கள் காலுல விழ வேண்டிய சூழ்நிலைன்னு இந்த ரெண்டு கட்சிகளும் வருத்தப்பட்டு கொண்டது .

இந்த ஏமாந்த மக்களை சரிக்கட்ட தான் இது மாதிரியான தேர்தல் வாக்குறுதிகளை கொடுக்க வேண்டியுள்ளது என இரு கட்சிகளும் நொந்து கொண்டது


மரியாதைக்குரிய மக்களே எங்களை ஆட்சியில் அமர்த்தினால் நிலவில் இலவச மனை தருவோம் ,டெய்லி உங்கள் வீட்டிற்கு தேவையான உணவு பொருளை நாங்களே சமைத்து தருவோம் ,சமைத்து தருவதோடு மட்டுமின்றி சமைத்த உணவை உங்கள் வாய்களில் ஊட்டியும் விடுவோம் .மாதம் ஒரு முறை இன்ப சுற்றுலாவும் அழைத்து செல்வோம். பீடி, சிகரெட், ஒயின் டெய்லி பேட்டாவாக சன்மானமாய் அளிக்கப்படும் என்று கொள்ளுப்பேத்தி கட்சி அறிவித்தது

பேரன்பு கொண்ட பெருமக்களே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தினம் ஒரு பர்கர், கே .எப் .சி .சிக்கன் பக்கெட் இலவசமாக வீடு தேடி வந்து தருவோம், அந்த கட்சி காரர்கள் கேவலமாக ,குறைவான மதிப்புள்ள நிலவில் தான் மனை தருகிறார்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தினால் அந்த ஆண்டவன் வாழ கூடிய மூன்றாம் உலகத்திலேயே உங்களுக்கு இடம் வாங்கி தருவோம் என்றது கொள்ளுப்பேரன் கட்சி இதையெல்லாம் மூன்றாம் உலகத்தில் இருந்து கேட்டு கொண்டிருந்த கடவுளுக்கு திடீர் என்று ஹார்ட் அட்டாக் வரத் தொடங்கியது .

எந்த மதத்து கடவுள் தான் மூன்றாம் உலகத்து கடவுளை காப்பாற்ற வருவாரோ???

## • முத்தையா மோகன்

எண்ணிப்பாரா
நொடிகளில்
நிகழ்ந்து முடியும்
சம்பவம் அது....
மேலென்பார்
கீழென்பார்
முட்டாளென்பார்
மூடரென்பார்....
சீட்டுக்கட்டாய்
கூரைகள் வெய்து
சீமையெல்லாம்
திறம்பட நெய்து....
சேர்த்த ஒவ்வொன்றும்
சேமிப்பில் கிடக்க
சேராத நன்மைகள்
சினம்கொண்டு சிணுங்க...
எத்தனை ஆட்டம்
ஏனிந்த அளப்பறை
பெரியாரும் பெருசுகளும்
எவ்வளவோ எடுத்துரைத்தும்
ஏற்க்க மறுத்து
ஏங்கி தவித்து
அடச்சீ என்றுலகு
காறியுமிழ்ந்து...
அடடே வாழ்வெள்ளாம்
ஆனந்தம் என்றெண்ண
அடிவயிற்றில் புளிகறைக்க
எண்ணிப்பாரா நொடிகளில்...
நின்றாடி சுழன்றது
நிலைதலர்ந்து
நிலத்தில் விழ
நிக்குது எல்லாமும்....
ஏதேதோ பெயரிட்டு
ஏறிக்கடந்த உறவெள்ளாம்
பிணமென்று பெயரிட்டு
பெறுங்குழிக்குள் தள்ளுது...
பெரியாரும் பெருசுகளும்
எத்தணையோ எடுத்துரைத்தும்
ஏனிந்த ஆட்டம்
எதற்கிந்த அளப்பறைகள்...



● பிரபா அன்பு

எந்தன் இதயக் கூட்டின்
மகாராணியே
என்னைப் பெற்றெடுத்த
கருணைக் கடலே

என்னுருவம் பார்த்திட முன்பே
கருவினில் வைத்து என்னை
நிறைவாக காதல் செய்தவளே

எந்தன் முகம்
பார்க்க வேண்டுமென
நீ சிறு பிள்ளையாய்
அடம்பிடிக்கும் போதெல்லாம்
கண்ணீரோடு போராடுகிறேன்

வீட்டுக்கஸ்ரம் போக்கிடவே
நாலுகடன் வாங்கி என்னை
பத்திரமாய் அனுப்பி வைத்தாய்
வெளிநாட்டு வாழ்க்கைக்கு

இரவு பகல் பாராது
ஓடாய் தேய்ந்து உழைத்ததனால்
முழங்கால் சிரட்டையும்
தேய்ந்து போச்சு
அதனால் துயரமும் நீண்டு போச்சு

வீசா பிரச்சினையால்
சரியான வேலையுமில்லை
மனம் நிறைவான வாழ்க்கையுமில்லை
நான்படும் அவஸ்தையைக் கூறி
உன்னை கவலைப்பட விடமாட்டேன்

பெத்த பிள்ளை உன்னைப் பார்க்க
வருமோ என
நாளும் பொழுதும்
பாசத்தவிப்பில் நீ துடிப்பதை
அறியாப் பிள்ளை நானில்லை

கலங்காதே தாயே
காலம் வழிவிட்டால்
உனது முகம்காண ஓடோடி வருவேன்
உந்தன் சேலைத் தலைப்பில்
ஒரு தூக்கம் கொள்வேன்

எந்தன் உள்ளத்தில் வாழும்
உன்னத தெய்வமே
உன்னையும் என் மண்ணையும்
கட்டி அணைத்து முத்தமிட வேண்டும்
நான் ஓடி விளையாடிய
செம்பாட்டு மண் மீது
காலாற நடைபோட வேண்டும்.

● ந. கிருஷ்ணசிங்கம்



# நட்பு

தாவடி அம்மன் கோவிலுக்கு அப்பால்.. அந்த அயலிலுள்ள தமது சொந்தத்; தோட்டநிலத்தில் அமைந்துள்ள சிறியதொரு கல்வீட்டில் வாழும் வறியகுடும்பத்தில் பிறந்த மூத்தவன் முகுந்தன். வாரிவிடாத சுருள்முடியும்.. துயரம் பரந்த முகமும் நெடிய சிவந்த உடலும்கொண்ட வாலிபனாவான்.

அவன். இரண்டு வருடங்களுக்குமுன்பு தந்தையாரை இழந்துவிட்டதினால்.. அந்தக் குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு. தனது தங்கைகள் இருவரையும் தயாரையும் பராமரித்து வருகின்றான்.

வீட்டிலுள்ள தோட்டத்தின் செம்மண் தரையைக் கொத்திப் புரட்டிப் பாத்திகள் கட்டிப் பயிர்களிட்டு வளர்த்து.. அவைதரும் பயன்களைக் கொண்டு.. தமது குடும்ப வாழ்க்கையை மிகுந்த வதைகளோடு இவன் வழிநடத்துகின்றான்.

ஊரெங்கும் உருப்பெற்ற வறுமை வரிசைகட்டிப் பரவும் இந்த நாளில்.. விளக்கெரிக்க எண்ணையற்ற இருண்ட வீடுகளில் ஒன்றான தனது இல்லத்திலிருந்து.. அதிகாலையில் எழுபவன் தனது கடமைகளை நிறைவேற்றும் பணியில் தீவிரகதியோடு ஈடுபடுவான்.

தினமும் புதிதாகப் பிறக்கும் விலைவாசி அவஸ்தைகள் பலவற்றினிடையே வினையாற்றல் தளராது.. வியர்வை வடிய அயராது உழைக்கின்றான்.

அவனின் தந்தையார் முத்துச்சாமி கட்டிட வேலைகளில் மேசன்தரத் தொழிளிலாளியாக இருந்தவர்.

அவர் மிகவும் ஒழுக்கமானவர். எந்விதக் கெட்டவகைப் பழக்கங்களும் தன்னைத் தீண்டாதவாறு மனத்திடமோடு வாழ்ந்தவர்.

அயலில் இருக்கும் அம்மன் கோவிலின் தேவார திருவாசக ஓதுவார் குழுவிலும் அங்கம் வகித்த அவர்.. தாவர உணவையே சாப்பிடுவதால் அவரின் குடும்பத்தினரும் அதையே பின்பற்றினர்.

முத்துச்சாமி அன்று உயரமான கட்டிடம் ஒன்றில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்போது.. தவறிவிழுந்து தலையில் அடிபட்டதால் மயக்க நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் செய்தியை அறிந்த அவரது நண்பர் நல்லதம்பி விரைந்துவந்து. வையித்தியர்களோடு உரையாடி.. அனைத்து உதவிகளையும் புரிந்தார்.

அத்தோடு.. முத்துச்சாமியின் மனைவியாரோடும் பிள்ளைகளோடும் ஆதரவோடு உரையாடி அவர்களின் பதட்டத்தைத் தணித்து.. தெம்பு ஊட்டினார்.

அடுத்தநாள் அறிவுதெளிந்து கண்விழித்துப் பார்த்த நண்பரோடு.. கதைத்து அவருக்கு ஆறுதலும் கூறினார்.

தனது மகனை அழைத்து அருகில் இருத்திய முத்துச்சாமி. அனுங்கும் குரலில் வருந்தியவாறு முயன்று.. மெதுவாகக் கதைக்கத் தொடங்கினார்.

என்ரை ராசா! உன்னை நான் படிப்பித்து நல்ல உத்தியோகத்தில் இருத்திப் பார்க்க விரும்பினேன். திடீரென நடந்த இந்த விபத்து என்னைப் படுக்கையில் வழத்திவிட்டது. நான் தப்பியெழுவேனோ தெரியாது.

என்றவர்.. தனது தலைமுதல் உடலெங்கும் முறிந்த எலும்புகளின் வலியைத் தாங்கமுடியாது வாய்திறந்து அலறினார். தொடர்ச்சியாக இருமினார். சற்றுத்தெளிந்து மறுபடியும் பேசத்தொடங்கினார்.

நான் செய்த நல்லகாரியங்கள் உனக்கு வழிகாட்டியாக இருக்கட்டும். கடைசிவரையும் சோம்பலில்லாமல் நான் உழைத்தேன். நீயும் எந்தத் தொழிலாயினும் அதைப்பழகி.. உழைக்கக் கற்றுக்கொள். தவறான வழிகளில் நான் பணம் தேடவில்லை.

திரும்பவும் இருமல். திரும்பவும் பேச்சு..

உன்னைப் பெற்றவளையும்.. உன்ரை தங்கச்சிமாரையும் கண்கலங்க விடாதே.

மூத்தவள் தன்ரை படிப்பை இடைநடுவிலை விட்டதுபோலை மற்றவளும் நடக்காமல் அவளைப் படிக்கவை.

கடவுளை நம்பு. இதனாலை கெட்டசகவாசங்கள் உன்னையண்டாது.

ஏனப்பா! எதையெதையோ சொல்லிறியள். நீங்கள் சுகமாகி எழும்பி நடமாடுவீர்கள். பேசாமல் இருங்கள்.

என்று முகுந்தன் தந்தையாரைத் தேற்றியபோது.. அவருக்கு மீண்டும் இருமல் வந்தன. தொடர்ச்சியாக மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்குகின்றது. உதட்டை அசைக்கின்றார். தேகம் படபடத்து நடுங்கியது.

மிரண்டு நோக்கியவர்.. நண்பர் நல்லதம்பியைப் பார்த்தபடி அழுதார். அவரின் கையைப்பற்றிய

நல்லதம்பியும் துயரம் தாங்காது விம்மினார்

முத்துச்சாமியின் விழிகள் பிதுங்கி.. வெட்டி வெட்டி நோக்குகின்றன. சற்றுநேரத்தில் அவரின் உடல் கட்டைபோல் விறைக்கின்றது. முத்துச்சாமி இந்த உலகத்தைவிட்டு போய்விட்டார்.

அழுதபடி தலை கவிழ்ந்தவாறு

நல்லதம்பி.. கட்டிலில் கிடக்கும் நண்பரின் உடலை உற்று நோக்கிவாறு நின்றார். கன்னத்தில் கோடிட்டு ஒழுகும் கண்ணீரைச் சால்வையால் துடைத்தபடி தழுதழுத்த குரலில் கதைத்தார்.

செத்தவீட்டுச் செலவு முழுவதையும் நான்தான் செய்வேன். இதில் ஒருவரும் தடைசொல்லக்கூடாது.

என்று கூறியபின்பு வேகமாக வெளிக்கிழம்பி நடந்தவர்.. அனைத்து ஆயத்தங்களையும் செய்வதில் அதிதீவிரத்தோடு ஈடுபட்டார்.

ஊரவர்கள் வியந்துநோக்க.. நல்லதம்பி நண்பரின் இறுதி நிகழ்வுகளை வெகுசிறப்பாகச் செய்துமுடித்தார்.

நாட்கள் நகர்ந்து வருடம் இரெண்டு முடிந்தாலும் தந்தையாரின் திடீர் மரணத்தையும்.. அன்றுதல் இன்றுவரை தங்களுக்குத் தளராது உதவிகள்புரியும் நல்லதம்பி மாமவையும்.. அவரின் மனைவியாரையும் முகுந்தன் மனங்கசிய எண்ணிப்பார்ப்பது வழக்கம்.

அரசுக்கு எதிராகக் குரலிட்டுப் பதாதை மட்டைகளைத் தூக்கிக்கொண்டு மக்கள் ஒன்றுகூடித் தமது கோரிக்கைகளை உச்சரித்தவாறு வீதிகளில் வரியூர்ந்து.. ஊர்முழுவதும் திரளும் செய்திகளை நண்பர்கள் கூறம்போது மிகுந்த அக்கறையோடு கேட்கும் முகுந்தன்..

முதலாளி வர்க்கத்தின் கொடுமைகளுக்கான மக்களின் எழுச்சிப் போராட்டங்கள் இன்னும் பெருகவேண்டும். இவற்றில் எல்லாம் நாங்களும் பங்குபற்றவேணும்.

என்று முகுந்தன் தனது ஆவலைத் தெரிவிப்பான்.

வீட்டில் பாய்விரித்துப் படுக்கும் வேளையெல்லாம்..

தனது தந்தையாரையும்.. அவரின் நண்பர் நல்லதம்பி மாமாவையும்.. மனைவியார் மகேஸ்வரி மாமாமியையும் நினைத்து வணங்கியபின்பே தூங்குவான்.

அப்பாவின் காலத்திலிருந்து இன்றுவரை இடைவிடாது நல்லதம்பி மாமா செய்துவரும் உதவிகளுக்குத் தனது குடும்பத்தினர் பெரிதும் கடமைப்பட்டவர்கள். என்று கண்பனிக்க அவன் நினைப்பான்.

முகுந்தன் தனது நண்பர்களிடம் அந்த அற்புதமான மாமாவைப் பற்றியும் அவர் தனது தந்தையாரோடு வைத்திருந்த நட்புக்குறித்தும் விளக்கமாகப் பலமுறை எடுத்துக்கூறியவன்.

நாட்டில் வறுமை வளரவே.. எங்களுடைய சுயநலங்களையும் எமது குடும்பத்தாரின் நல்வாழ்வையும் மட்டுமே சிந்தித்துச் செயற்படும் ஒரு சீர்கெட்ட இனமாக நாங்கள் மாறிவருகின்றோம்.

அக்கம் பக்கம் ஊர் உலகம் என்னும் விவகாரங்களில் நாம் அக்கறை காட்டுவதில்லை. அப்பாவின் நண்பர் நல்லதம்பி மாமா அப்படியில்லை. அவரொரு புனிதமான மனிதர். மனநிறைவோடு விரும்பிப் பொதுத் தொண்டுகளில் ஈடுபடுபவர். எல்லோரையும் நேசித்துப் பேசிப்பழகுவார். அவரின் உதவியில்லாது என்னால் எங்கடை குடும்பத்தைக் கொண்டுநடத்த முடியாது.

என்று முகுந்தன் அன்று தனது நண்பன் கனகராசாவுச் சென்னான்.

அவரைப் பெரிசாப் பாராட்டுகின்றாயே அவர் ஆரடாப்பா. நான் அவரைப் பார்க்கவேணும்.

என்று அந்த நண்பன் கேட்கவும்..

குங்குமப் பொட்டு நல்லதம்பி.. என்று சொன்னால் ஊரவர்களுக்கு அதிகமாய்த் தெரியும். அவர் முன்னம் புகையிலைத் தரகராக இருந்தவர்.

அதற்குப்பிறகு சுருட்டுக் கைத்தொழிற்சாலை ஒன்றைவைத்து நடத்தியவர். காலப்போக்கில் சுருட்டு வியாபாரம் குறைந்து போகவே.. அவர் அந்தத் தொழிலகத்தை மூடிவிட்டார்.

ஓயாத உழைப்பாளியான இவரை அவரின் நண்பரான என்ரை அப்பா போற்றிப் புகழாத நாட்களேயில்லை.

உன்ரை மகன் பிரான்சிலை இருந்து உழைத்து அனுப்பும் காசுகள் உனக்குக் காணாதே. பம்பரம்போலை சழன்றவாறு.. அதையிதைச் செய்து அலையிறாய். ஆறுதலாய் இரடாப்பா!

என்று அப்பா அறிவுரை சொன்னாலும் நல்லதம்பி மாமா கேட்கமாட்டார்.

அவர் உங்களின்ரை சொந்த மாமாவோ.

என்று நண்பன் வினாவவும்..

சாச்சா! அவர் பிறத்தியார். ஆனால் எங்கடை சொந்தங்களைவிட நெருக்கமானவர். எவரோடும் அவரை ஒப்பிடமுடியாத அளவுக்கு வலுநல்லவர்.

என்றான் முகுந்தன்.

விலையேற்றத்தால் வில்லங்கப்படும் தோட்டக்காரர்கள் மண்ணெண்ணை இல்லாததால் இயந்திர மோட்டார்களை இயக்கமுடியாது..

துலாமிதித்து நீரிறைத்து விளைவிக்கும் பயிர்களின் காய்கனி கிழங்குகளை.. கொள்முதல் செய்யும் முதலாளிகள் தோட்டக்காரர்களை மிரட்டிப் பலதும்கூறிக் குறைந்த விலையில் பொருட்களை வாங்கிச்சென்று.. கூடியவிலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம்பெறும் கொடுமையைப் பொறுக்கமுடியாது.

நல்லதம்பி மாமா தனது ஊரிலேயுள்ள சனசமூக நிலையத்தின் ஆதரவோடு.. நியாயவிலைக் கொள்வனவுச் சங்கம் ஒன்றைத் தொடங்கி வெற்றிகரமாக இயக்கிவருகின்றார்.

இந்தவயதிலும் அந்தளவுக்குச் சுறுசுறுப்போடு அந்த மாமா முழுநேரமும் பொதுத் தொண்டுகளைச் செய்கின்றார். இதனால் அதிகமா அவரை வீட்டில் காண்பது. அரிதாகிவிட்டது.

என்று அவன் சொன்னபோது.. அவனின் நண்பன் கனகராசா பெரிதும் வியப்படைந்தான்.

மறுநாள் காலை முகுந்தன் அவரைச் சந்தித்துத் தனது தங்கையாரின் காதல்; பிச்சினை குறித்துக் கதைக்க எண்ணி இணுவிலிலுள்ள அவரது வீட்டிற்குப் போனான். அங்கு அவர் இல்லை. மாமியார் மகேஸ்வரி அவனை அழைத்து அமரவைத்து உரையாடினார்.

என்ன உடம்புக்கு. ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்.

என்றுகேட்ட மாமியாரைப் பார்த்து..

நன்றாகத்தான் இருக்கிறேன்.

என்றுகூறிச் சிரித்தான் முகுந்தன்.

அவனின் சிரிப்பு வறட்சியானது என்று உணர்ந்த மாமியார்

எல்லாம் எனக்குத் தெரியும். உன்ரை தங்கச்சி சிவமலரின் கலியாண விசயம்தான் உண்னைக்

கலங்கடிக்கிறது.

உன்ரை மாமா எல்லாம் எனக்குச் சொல்லிப்போட்டார். நீ பெண்மனம் தெரியாத முரடன். ஏனடா அவளைப்போட்டு அடித்தனி. பாவம் அந்தப்பிள்ளை. காதலிப்பது பெரியகுற்றமோ. உனக்கும் அதுவந்தாற்றான் தெரியும்.

பெடியள் பெண்பிள்ளைகளை வலிந்து கலைச்சுப் பின்தொடர்ந்து திரிந்து காதலிப்பான்கள். கலியாணம் பேசிப்போனால் சீதனம் கேட்பாங்கள். அதுவும் இப்ழி;பாது காசாகவல்லோ கேட்கிறாங்கள்.

என்ரை மகன் எழிலன் அங்கை எங்கடை ஊர்ப்பிள்ளையைத்தான் முடித்து இருக்கிறான். சீதனம் கேட்கவில்லை.

என்று மாமியர் பெருமையோடு சொல்லவும்..

அதுசரிமாமி! நீங்கள் ஊருக்கு அள்ளிக்

கொடுக்கிற குடும்பம். அப்பிடி மற்றதுகள் இருக்குங்களை.

முகுந்தன்! உதுகளைவிடு.

எப்படியும் உன்ரை தங்கச்சியின்ரை கலியாணம் நடக்கவேணும். அந்தப்பெரும் சீதனத் தொகையை உன்னாலை திரட்டமுடியாது என்பதும் எனகுத்தெரியும். என்னவரும் இதைத்தான் சொன்னவர்.

எங்களுக்கெண்டு ஆரிருக்கினம். பெத்தவனும் வெளிநாட்லை. எங்கடை நல்லது கெட்டது எல்லாவற்றுக்கும் உதவியாக வந்துநிற்க நீயும் உன்ரை கொம்மாவும்தானே இருக்கிறியள்.

முகுந்தன்! ஒன்றுக்கும் யோசிக்காதை. எல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுவம்.

என்று சொன்ன மாமாமியை அதிர்ந்து நோக்கியவன் நன்றியூற்றூப் பெருக்கால் விழிநீர் கசியவே உருகிய முகுந்தன்.. உணர்ச்சி மேலீட்டால் கைகூப்பி வணங்கினான்.

நகைவாங்கியதில் அம்மாவின்ரை தாலிமுதல் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. இருப்பது வீட்டுநிலம் மட்டும்தான். அதையும் ஈடுவைத்துக் காசுவாங்கலாம் என்று அலைந்தன் கிடைத்தது ஏமாற்றம்தான்.

என்று சொல்லி முகுந்தன் அழவும்..

உனக்கு நான் அடிப்பன்! ஆரைக்கேட்டு நீ இதையெல்லாம் செய்தனி. உங்கடை மாமா ஊர்வேலைகளிலை உசாராகி உறக்கமின்றி அலைகிறார். அதனாலை உங்களை அவர்வந்து சந்திக்க முடியாமல் போச்சுது.

மாமிநான்.. சொல்லிறன் கேளடா!


சிவமலர் எங்கடை பிள்ளை. அவளின்ரை கலியாண விசயத்தை நாங்கள் பாத்துக்கொள்ளுவம். ஒன்றுக்கும் நீயோசிக்காதை.

கைகால் கழுவிப்போட்டுவா! சாப்பிடலாம். நாங்கள் வெள்ளிக்கிழமை நிலத்தில் இருந்துதான் சாப்பிடுவது வழக்கம்.

மாமியின்ரை சைவச்சாப்பாட்டுச் சமையலின் உருசியை சாப்பிட்டுப்;பார்.

என்று சொன்னவர்.. எழுந்துசென்று தலைவாழை இலை வெட்டுகின்றார்.

● ந. தாமரைச் செல்வி, இலங்கை



# கொல்ல துடிக்குது மனசு

இன்று எப்படியும் அவள் தப்ப முடியாது என மனதிற்குள் எண்ணிக்கொண்டு சுவர் ஓரமாய் பிச்சைக்காரன் நிற்கிறான்.'அவள் இன்று கோவிலுக்கு வரும் நேரம் தான். இதை விட்டால் அவளைப் பிடிக்கவே முடியாது. காரணம் அவளின் பணபலம் ஆட்கள் பலம். இவள் கோவிலுக்கு வரும் நேரம், பிச்சைக்காரர்களின் கூட்டம் அதிகமாக இருக்கும். வறியவர்களைக்கண்டால் வாரி வாரி வழங்குவாள். அத்துடன் வெள்ளிக்கிழமை நல்ல சாப்பாடு. அவளின் கணவனும் அதற்கு பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறான். இவளைத்தான் தேடிக்கொண்டு இருந்தேன். மனம் பதற்றமாய் கடும் கோபத்தில் கொதித்தது.

போன மாதம் தான் பைத்தியமாக அன்றாட பசிக்கு கிடைக்கும் வேலையை செய்தவனின் கண்களில் இவள் பட்டாள். அவளுக்கு ஆள் அடையாளம் தெரியவில்லை. அந்தப் பெரிய கடையில் பொருட்களை வாங்கிக்கொண்டு இறங்கும் அவளை இலகுவாக அடையாளம் கண்டு கொண்டு அருகே சென்றான். அவளுக்கு சத்தியமாய் அடையாளம் தெரிய வாய்ப்பில்லை. அவளைக் கண்டதும் ஆத்திரத்தில் பாய்ந்து பிடிக்க அவள் இலாவகமாக ஒதுங்கி நடந்தாள். அவளுடன் கூட வந்தவர்கள் இவனைத் தடுக்க இவன் "ஏய்! நில்லுடி!" என்று கத்த அவள் திரும்பிப் பார்த்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை உதவியாளரிடம் கொடுத்து அவனிடம் கொடுக்ச சொல்லி வாகன கண்ணாடியை மூடி விட்டாள். இவனுக்கு ஆத்திரம் இவள் வாழவே கூடாது எப்படியும் பழிவாங்க வேண்டும்.பழிவாங்கத் துடிக்கும் இவன் யார்! அவள் யார்!

சுந்தரம் பிரபல நிறுவனத்தின் உரிமையாளர். அன்று கணனி பிரிவுக்கு நேர்காணலுக்கு வந்த மூன்று பெண்கள் இரண்டு ஆண்களில் தொழில் தகுதி இல்லாத பெண்ணே இந்த நிரஞ்சலா. அவள் தற்போதுதான் படித்து வெளியில் வந்திருக்கிறாள். "சார் போகும் எல்லா இடத்திலும் தொழில் முன் அனுபவம் கேட்கிறார்கள். யாருமே தொழில் தரவில்லை என்றால் எப்படி சார் அனுபவம் கிடைக்கும்? " அவளின் அப்பாவியான முகத்தின் கேள்வியில் ஆயிரமாயிரம் வறுமையின் வலிகள், தொழில் கிடைக்காத வெறுமை, வறுமை எல்லாம் கலந்துக்கிடக்க "சரி உங்களைத் தெரிவு செய்கிறேன். ஆறு மாதம் வரை சிறிய கொடுப்பனவு மட்டுமே. உங்கள் திறமையைப் பொறுத்து சம்பளம் அதிகரிக்கப்படும் நாளையிலிருந்து நீங்கள் தொழிலுக்கு வரலாம்" அவள் மகிழ்வுடன் தலையாட்டி நன்றி சொல்லி விடைபெற்றாள்.

அடுத்த நாள் காரியாலயம் திறக்கும் முன்னே அவள் வாசலில் காத்திருக்கிறாள்.

நாட்கள் வேகமாகக் கடந்தன. அவளின் சுறு சுறுசுறுப்பு திறமை எல்லோரையும் பொறுப்பாக விரட்டி வேலைவாங்கும் குணம், அவளை சுந்தரத்தின் அந்தரங்க காரியதரிசியாக மாற்றும் அளவு மாற்றிவிட்டது. அதற்கு பின் எல்லாமே அவளின் கீழ்.

ஒப்பந்தம் செய்யாத நிறுவனத்தின் உரிமையாளராக மாறிவிட்டாள். சுந்தரத்திற்கு தனது மனைவி குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்றால் கூட இவளே ஒப்புதல் அளிக்க வேண்டும்.

சுந்தரத்தை மறுமணம் செய்துக் கொள்வதாக அவள் வாக்களிக்க குடும்பத்தினரும் சுந்தரத்திடம் புரியவைக்க முடியவில்லை. காரணம் அவன் தன் பெற்றோர் குடும்பம் என யாருக்கம குறைவைக்கவில்லை என்பதால் அவனின் தவறை சுட்டிக்காட்டும் தைரியம் யாருக்கும் இல்லை.

இரண்டு வருடங்கள் வெளியில்,யாருக்கும் தெரியாமல் அவள் மனைவியாக மாற காரியாலயத்தில் ஒவ்வொருவராக விலக தொடங்கினர். அவள் நல்லவளில்லை. நிறையே பேருடன் தொடர்பு என்பதை பலர் சுந்தரத்திற்கு உணர்த்த முயன்றும் அவர்களை சுந்தரம் வெறுத்தான் .

நிரஞ்சலாவோ ஆடை நடை உடை பாவனை அனைத்தும் மாற்றி தனது குடும்பத்திற்கும் சொந்த வீடு வாங்கி கொடுத்து விட்டாள்.அந்த நிறுவனத்தில் காலம் காலமாக இருக்கும் ஊழியர்கள் மனதிற்குள் வருத்தப்பட்டனர்.

எல்லாம் அவள் வசமானது . யார் இருக்கலாம் யார் போகலாம் என்பதை அவளே முடிவெடுத்தாள்.

காரியாலயம் அவர்களின் அந்தரங்க உல்லாச வீடாக மாறியது.சுந்தரம் நிரஞ்சலாவுக்கு என்ன பிடிக்கும் அவளின் மகிழ்ச்சி என்ன என்பதில் கவனம் போனது.அவளே உலகமென மாறினான். அளவுக்கு அதிகமாக நம்பிக்கை வைத்து சகல சுதந்திரமும் கொடுத்தான்.

காரணம் தனது எதிர்காலமனைவியென்ற நம்பிக்கை மட்டுமே. பெரிய பெரிய வியாபார நிறுவனத்தில் தனது மனைவியென்றே கூறினான்.

வியாபாரம் முழுதாக இவள் வசமானது. நிறுவனம் கடனை நோக்கி நகர்ந்தது,எதையும் அவதானிக்கு நிலையில் சுந்தரம் இல்லை. காரணம் அவள் மீதுக் கொண்ட அதீத நம்பிக்கை மட்டுமே.

ஒரு நாள் துரோகி வேறு ஒருவனுடன் ஓடி விட்டாள். இவனுக்கு அவள் சொத்துக்களை சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டான் என்பதை நிரூபிக்க ஆதாரம் இல்லை.

அவளிடம் சென்று நீயின்றி எனக்கு எதுவும் இல்லை. "நீ அருகில் இருந்தால் மறுபடியும் மீண்டும் சம்பாதித்து விடுவேன் வா" வென்று கெஞ்சினான் கதறினான். கடன் காரரர்களால் உயிருக்கு பயந்து ஒழிந்து திரிந்தான். எல்லோரும் எச்சரித்தும் கேட்காமல் இந்த நிலை. அனைவரும் கைவிட்டனர்.

குடும்பமும் நடுதெருவுக்கு வர கடன்காரர்களின் தொல்லைக்கு பயந்து உணவில்லாமல் இன்று தெருவிலே திரியும் பிச்சைக்காரனாக மாறிவிட்டான் .

என்னக் கொடுமை! அவனுடன் போனவள் வாழாமல் இப்போது வேறொரு பெரும் புள்ளி ஒருவனுக்கு மனைவியாக இருக்கிறாள்.

சுந்தரத்தின் மனம் பொறுக்க வில்லை. அவளைக் கொல்ல வேண்டும்.

நான் அடுத்த இன்னொருவன் இப்போது வேறு ஒருவன் இனி யாரோ!.

இதோ அவள் வருகிறாள் அழகுப பதுமையாக. யாரும் நம்ப மாட்டார்கள் இவனுக்குள் ஆத்திரம் கண்ணை மறைக்க அவள் சிரித்துக்கொண்டு பிச்சைக்காரர்கள் இருக்கும் வரிசையில் நூறு ரூபாயுடன் பகலுணவும் சேர்த்துக் கொடுத்துக்கொண்டு வர இவன் அருகில் வந்ததும் அப்படியே அவளை இருக்க அணைத்து தான் கைகளில் வைத்திருந்த கத்தியால் வயிற்றின் அடியில் மாறி மாறி குத்துகிறான் . சுற்றியிருந்தாக் கூட்டம் இவனைக கொலை வெறியுடன் அடிக்க இவனுக்கு வலிக்கவேயில்லை . பலகுடும்பங்களின் வாழ்க்கையை காப்பாற்றிவிட்ட நிம்மதியில் சிரிக்கிறான் . அவளின் உயிர்

கொஞ்சம் கொஞ்சமாக அடங்குகிறது. சுந்தரத்தின் கொல்லத் துடித்த மனசு ஆறுதல் அடைகிறது .

● பா. வாசுகி, திருவண்ணாமலை

## அழகு தமிழ்

எனக்கான
சூழலில்
என் கவிதைகள்...!!!
என் சூழலும்
என் தமிழுமே
என் பாக்கியம்,
என்கவிதைகள்
தமிழுக்காக,
தமிழின்
அழகுக்காக,
தமிழின்
வளர்ச்சிக்காக,
தமிழின்
இனிமைக்காக,
தமிழின்
உயிர் மூச்சுக்காக,
உலகம்
தமிழ் மணத்தால்
நிரம்பியுள்ளது,
ஆயினும்...
கடலினுள்
முத்து போல்
என் தமிழ்
பாரினுள்
மூழ்கியுள்ளது ,
மூழ்கி
முத்தெடுப்பது
என்பது
சிலருக்கு தானே,
மூத்த மொழி
எம்தமிழ்
மொழியாக
இருந்தாலும் ,
என் தமிழும்
முத்துபோல்,
நானும்
தமிழில்
மூழ்கி
முத்தெடுக்கின்றேன்.



● இரா.வெங்கடேஸ் குமார், மதுரை


## மனம் போடும் வேடம்

மண் தன்னில் பிறப்பினைக் கொண்டு
மாந்தனும் வேந்தனும் தாம் என்று
பிறரும் தன் போலென நினையா மனித
மனது
தம் மனத்திற்கு சமரசம் கூற வேடம் தறித்து
பொய் சொல்லும் ஆறுதல் சொல்லே
நல்மனம்
மண்ணின் எதிர் நின்று பார்க்கும் வான்
மேகத்தில் பிறப்பினைக் கொண்டு தன்
இடத்தினை விட்டு மண்ணைத் தேடி
மழையாய் மாறி தன் ஆயுள் முழுதும் ஓடி
மனிதன் வாழ தான் முழுக்க வறண்டு
என்றும் ஈரத்துடன் வாழும் வான் இருந்து
விழும் மழை கொண்ட மனதன்றோ
நல்மனம்
மனிதன் மனதில் சமரசம் தோன்றி
சமம் என்னும் சாரல் கொண்டால்
ஈரம் தோன்றி நல்மணம் வீசும் மழைப்போல்
என்றும் மனம் நலம் பெறும்.

● கண்ணன்
(கண்ணன் விஸ்வகாந்தி)

## பெண்களால் வழியும் பேருந்து

பெண்களால் வழிகிறது பேருந்துகள்
ஆண்கள் இடமின்றித்
திணறுகின்றனர்
வாய்விட்டு சிரிக்கிறார்கள்
கோபப்படுகிறார்கள்
ஆண் தோழர்களுடன் பேசுகிறார்கள்
பிடித்த பாடலைக்
கேட்கிறார்கள்
மல்லிகையும் கனகாம்பரமும்
நாசியைத் துளைக்கிறது
சமையலறை சாளரத்தில்
எதிர்வீட்டு சுவர் மட்டுமே தெரிய
பேருந்தின் சாளரமோ
உலகையே காட்டுகிறது
தளைகள் ஏதுமின்றி
பேருந்தே பறக்கிறது
நடத்துனர் கேட்டார்:
‘கட்டணம் இல்லை
பயணச் சீட்டு மட்டும்
எங்க போறீங்க?’
பெண்மணி கேட்டார்:
‘இந்த பஸ் எங்க போகுது?’




● பாவலர் கருமலைத்தமிழாழன்

## அச்சத்தை விட்டெழுவோம்

அச்சம்நம் மனத்திருந்தால் நிழலும் நம்மை
அச்சுறுத்தி மூலையிலே முடங்க வைக்கும்
நச்சென்று தும்மினாலும் சுவற்றில் பல்லி
நகர்ந்துகுரல் கொடுத்தாலும் உடல்ந டுங்கும் !
முச்சந்தி தனில்பூனை குறுக்கிட் டாலும்
முக்காட்டுக் கைம்பெண்தான் எதிர்வந் தாலும்
பச்சென்று மனமெல்லாம் படப டக்கும்
பணியாற்ற முடியாமல் துவள வைக்கும் !
மூடம்தான் இதற்கெல்லாம் மூல மாகும்
முன்வந்தே எதைசெயவும் தடையாய் நிற்கும்
ஓடத்தில் விழுந்தஓட்டை போல வாழ்வை
ஓங்குதற்கு விட்டிடாமல் மூழ்க டிக்கும் !
கேடதனைச் செயுமிந்த அச்சந் தன்னைக்
கேள்விகேட்டு மனத்திருந்தே ஓட வைத்தால்
வீடதனில் எப்பணியும் நடக்கும் நன்றாய்
வீழவைக்கும் தடைகளெல்லாம் தகர்ந்து போகும் !
அச்சமுடன் நாமிருந்தால் தவறு செய்வோர்
அஞ்சாமல் தொடர்ந்திடுவர் துணிச்ச லோடே
மிச்சமின்றி நம்பொருளைச் சுருட்டிக் கொண்டு
மீண்டுமவர் நம்முதுகில் ஏறிக் கொள்வர் !
நச்சரவம் போல்கொத்தும் கயவர் தம்மை
நாம்துணிந்து எதிர்த்தால்தான் அடங்கிப் போவர்
அச்சத்தை விட்டெழுந்து அடக்கும் போதே
அறநெறிகள் செழிந்தோங்கி நேர்மை வாழும் !

● திருமதி.ரதி கலா

# எனது நகரம்



சபிக்கப்படாத என் நகரத்தின் வட கரையோரம்
விரிந்து கிடக்கிறது பாக்கு நீரிணை
ஓம்கார ரீங்காரமிட்டு துள்ளி எழும் நீரலைகள்
குதித்து விழுந்து மூழ்கிப் போகிறது கடலுக்குள்
ஆழத்தின் ரகசியத்தை அலைகள் மட்டுமே அறியும்
நளினமாகச் சிரித்துக் கொண்டது
வான்நிலா
மழைத்துமி பட்ட சல்லித் தெருக்களில்
மண் மணக்கும்
அடை மழையில் ச ல்லித் தெருக்களும்
தொலைந்து போனது
வானவெளியில் விளையாடிய மேகங்கள்
தோற்றுப் போன வெண்மதியை சிறைப்பிடிக்க.
இருண்டுபோன நகரத்து இல்லங்களில்
காமம் முளைக்கும்
காமமும் அழகுதான்
சனசமுத்திரம் பெருக்கெடுத்து நிரம்ப
மோகப்புயல் வீசவேண்டும்
வெட்கமறியாத ஆசையின் அம்மண நினைவுகளில்
போதைச் சுரப்புகளால் முறுகேறியது தேகம்
புறாக்களின் சில்மிசத்தில் உதிர்ந்த சிறகொன்று
கள்ளிச் செடியில் சிக்குண்டது
உள்ளங்கையினை விரிக்கச் சொல்கிற குழந்தை
முத்தமொன்றை இச்சென்று கொட்டியவாறு ஓடி மறைந்தது
டொக்........டொக்.........டொக்.......
வம்புப் பேச்சுகள் முடியாத இரவுக்குள்
என் நகரத்தின் கதவுகளை உடைத்தது
சூரியன்
இந்த நிமிடங்களில் இருந்து இந்தநகரத்துக்கு கதவுகள்
இல்லாமல் போனது......!!

● தி.வள்ளி, திருநெல்வேலி.



# பொய் முகம்...

அம்மாவிற்கு தண்ணீர் மற்றும் மாத்திரையை எடுத்து வைத்தவள்..."அம்மா.. எழுந்து சாப்பிடு. மாத்திரையை கொடுத்துட்டு நான் போகனும் .ஏற்கனவே நேரமாச்சு" பரபரத்தாள் கவிதா.

தட்டுத்தடுமாறி எழுந்து உட்கார்ந்த அம்மா," ஏண்டி என்ன போட்டு இப்படி படுத்துற... அவசரமா சாப்பிட முடியுமா?" என்று முணங்க...

" நம்ம ரெண்டு பேரோட தலைவிதியும் இப்படி கஷ்டப்படணும்னு இருக்கு... என்ன செய்ய?" என்றாள் வெடுக்கென.

ஒன்றும் பேசாமல் சாப்பிட ஆரம்பித்தாள் அம்மா. பர்சையும், மொபைல் போனையும் மறக்காமல் எடுத்துக் கொண்டாள் கவிதா.

அதற்குள் அம்மா சாப்பிட்டு முடிக்க... மாத்திரையையும் தண்ணீரையும் கொடுத்து சாப்பிட சொல்லி, டயபரையும் போட்டுவிட்டாள்." அம்மா! டிவி ரிமோட் பக்கத்துல இருக்கு.. பிளாஸ்கில்

பால் வச்சிருக்கேன். பத்திரமா இரு" என்றபடி, வீட்டைப் பூட்டிவிட்டு, பஸ் ஸ்டாப் நோக்கி நடந்தாள்.

பஸ் வர நேரமாக, டென்ஷன் அதிகமானது. வேலை செய்யும் பங்களா போய்ச்சேர இன்னும் அரை மணி நேரமாவது ஆகும். 'நேற்றே ராகவி அக்கா 'சீக்கிரம் வா 'ன்னு சொன்னாங்க. லேட்டா போனா கோபப்படுவாங்க. இந்த வேலையாவது நல்லபடியா இருக்கணும். அப்பத்தான் அம்மாவை ஓரளவாவது நல்லபடியா கவனிச்சுக்க முடியும் 'என்று நினைத்தாள் கவிதா. பஸ் வர, கூட்டத்தில் அடித்துப்பிடித்து ஏறினாள்.

பஸ்ஸை விட்டு இறங்கி, வேகமாக நடந்து, பங்களாவை அடைந்தாள். மாடிப்படி ஏறும் போது எதிரே வீட்டு மருமகள் ராகவி...

"என்ன கவிதா! சீக்கிரம் வான்னு சொன்னா கேக்க மாட்டியா? இரவு பணிப்பெண்ணும் போயாச்சு. நீ வர்ற வரைக்கும் பாட்டியை நான்தான் கவனிக்க வேண்டியிருக்கு. என் வேலை பூராவும் அப்படியே கிடக்கு" என்று எரிந்து விழுந்தபடியே படியிறங்கினாள் ராகவி.

ஒரு நிமிடம் பாட்டியின் அறை முன் நின்று தன்னை ஆசுவாசப்படுத்தி, உதட்டில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள் கவிதா....

"பாட்டிம்மா... கவிதா வந்திட்டேன். ராத்திரி நல்லா தூங்குனீங்களா? காலை டிபன் சாப்பிட்டாச்சா? மாத்திரையெல்லாம் போட்டுகிட்டீங்களா?" என்றபடி பாட்டியின் அருகில் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தாள்.

"வாடிம்மா வந்துட்டியா? ஒரு நாளப் போல ஒரு நாளாவது சீக்கிரம் வர்றியா? எப்பப் பாரு லேட்டா வர்ற... ராகவிக்கு என்கிட்ட பேச பிடிக்காது. எரிஞ்சு எரிஞ்சு விழுவா... 85 வயசாகியும், ஆண்டவன் அழைக்க மாட்டேங்குறான். போய் சேர்ந்தா தூக்கி போட்டுட்டு... அவங்கவங்க வேலையைப் பாப்பீங்க... ஆண்டவன் தண்டனையா ஆயுச போட்டிருக்கான் எழுந்து நடக்க முடியல... பாத்ரூம் போகக்கூட அடுத்தவங்க தயவு வேண்டி இருக்கு..." என்று பாட்டி புலம்ப, பாட்டியின் கையை ஆறுதலாக பிடித்துக்கொண்டாள் கவிதா.

"ஏன் பாட்டி இப்படி பேசுறீங்க உங்கள பாத்துக்கத் தான் நான் இருக்கேனே. ராகவி அக்காவுக்கு நிறைய வேலை, டென்ஷன், அதான் கோவமா பேசியிருப்பாங்க. அதை விட்டுத் தள்ளுங்க. நேத்து நைட்டு ஆஞ்சநேயர் சீரியல் பார்த்தீர்களா? ஆஞ்சநேயர் கடலைக் கடக்கும் போது ராட்சசி தடுத்தாளே... என்ன ஆச்சு பாட்டி?" என்று ஆர்வமாய் கேட்பது போல கேட்டு பாட்டியை டைவர்ட் செய்தாள்.

"அதை ஏண்டி கேக்கற கனகா..." என உற்சாகமாக நேத்து பார்த்த ஆஞ்சநேயர் சீரியலை சொல்ல ஆரம்பித்தார். கவிதாவை வாய்க்கு வந்த பெயரைச் சொல்லி கூப்பிடுவது பாட்டியின் வழக்கம் என்பதால் அதை பொருட்படுத்தாமல் கதையை கேட்டபடியே, பாட்டியை தூக்கி சேரில் உட்கார வைத்து, படுக்கையை உதறி மாற்றிவிட்டு , திரும்ப படுக்க வைத்தாள்.

டயப்பர் போடுவது பாட்டிக்கு பிடிக்காத விஷயம். எனவே பெட்பேன் வைத்து சிறுநீரை டாய்லெட்டில் ஊற்றிவிட்டு, கையை டெட்டால் போட்டு கழுவினாள். பின் கீழே போய், ஜூஸ் எடுத்து வந்து பாட்டியை தோளில் சாய்த்து குடிக்க வைத்தாள். அன்றைய பேப்பரை வாசித்துக் காண்பித்தாள்.

"காஞ்சனா! நாங்க திருச்சியில் இருந்தப்ப..." பாட்டி பழைய கதைகளை ஆரம்பிக்க... கவிதாவிற்கு அலுப்பாக இருந்தது. ஆயிரம் முறையாவது இந்த கதைகளைக் கேட்டிருப்பாள். தினமும் கேட்டு கேட்டு சலித்துப் போனாலும், ஆர்வமாக கேட்பது போல நடிக்க கற்றுக் கொண்டாள்.

பாட்டிக்கு உடம்பில் பெரிதாக எந்த வியாதியும் கிடையாது. ஒரு முறை கீழே விழுந்ததிலிருந்து எழுந்து நடக்க முடியாமல் போய்விட்டது. இரவில் ஒரு பெண்ணும், பகலில் கவிதாவும் பாட்டியை கவனித்துக்கொள்ள நியமிக்கப்பட்டனர்.

கவிதாவுக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மாவும் பாட்டியைப் போலவே நடக்க முடியாமல், படுக்கையில் விழுந்து விட்டவள் தான். நன்றாக இருந்த வரை, உழைக்க அஞ்சியவள் கிடையாது. கணவன் கை விட்டு ஓடிவிட, தன் ஒரே மகளை கஷ்டப்பட்டு உழைத்து, நர்சிங் படிக்க வைத்தாள்.

திடீரென வந்த விஷக்காய்ச்சல் அம்மாவை படுக்கையில் தள்ளி விட்டது. மூளையில் பாதிப்பு ஏற்பட, அதிலிருந்து மீண்டும் வந்தாலும், நடக்க முடியாமல் போனது. தட்டுத்தடுமாறி, படுக்கையில் உட்கார மட்டுமே அவளால் முடிந்தது.

எல்லா பொறுப்புகளையும் அம்மா கவனித்துக் கொண்டதால், கவலை இல்லாமல் இருந்த கவிதாவுக்கு குடும்பப் பொறுப்பு முழுவதும் தலையில் விழுந்தது. ஏதோ இந்த வேலை கிடைத்ததால் கைக்கும் வாய்க்கும் ஓடியது. வீடும் சொந்த வீடாகிப் போனதால் வாடகை கொடுப்பது மிச்சமானது.

பெரிய சேமிப்பு, சொத்து இல்லாத நிலையில், எதிர்காலம் பயமுறுத்தினாலும், தனக்கிருக்கும் கவலைகளை வெளிக்காட்டாமல் பாட்டியை நன்றாக கவனித்துக் கொண்டாள். பாட்டிக்கு சாப்பாடு கொடுத்து, மதியம் சாப்பிட வேண்டிய மாத்திரைகளையும் கொடுத்து, பாட்டி தூங்கியதும் தான் எடுத்து வந்திருந்த சாப்பாட்டை சாப்பிட ஆரம்பித்தாள்.

பாட்டி தூங்கி எழுந்ததும், தூக்கி உட்கார வைத்து, தலைக்கு எண்ணெய் வைத்து சீவி ரப்பர் பேண்ட் போட்டு விட்டாள். பின் முகத்தை துடைத்து, லேசாக பவுடர் போட்டு, நைட்டியை மாற்றிவிட்டாள். ராகவி கொண்டு வந்து கொடுத்த டீயை குடிக்க வைத்தாள். ஆறு மணியாகியும், இரவு வரவேண்டிய பெண் வராதது டென்ஷனாக இருந்தது. ராகவியிடம் கேட்க பயமாகவும் இருந்தது.

பஸ் பிடித்து போய், காய்கறி கடையில் காய்கறி வாங்க வேண்டும். அம்மாவுக்கு மாத்திரை டயப்பர் வாங்க வேண்டும்.நேரமானால் அம்மா டென்ஷனாகி விடுவாள். பக்கத்து வீட்டு அக்காவிடம் சாவி இருப்பதால், அக்கா கதவைத் திறந்து, லைட்டைப் போட்டுவிட்டு, அம்மாவை பார்த்து விட்டு போவார்கள் .அதுவே பெரிய ஆறுதலாக இருந்தது கவிதாவிற்கு.

நல்லவேளையாக இரவு பணிக்கு வரவேண்டிய பெண் வந்துவிட,அவசரமாக கிளம்பி பஸ் ஏறினாள் கவிதா.

கடைக்குப் போனால் நேரமாகிவிடும். அம்மா தனியாக இருப்பாள் .காலை ஒழித்துப் போட்ட பாத்திரங்களைக் கழுவி... அம்மாவின் துணியை துவைத்துப் போட்டு... வீடு கூட்டி, மறுநாள் சமையலுக்கு வேண்டியதை தயார் செய்து... நினைக்கவே மூச்சு முட்டியது. அம்மா நன்றாக இருந்த போது எந்த பொறுப்பையும் தனக்கு கொடுத்ததில்லை என்ற நினைப்பும் எட்டிப்பார்த்தது.

பூட்டை திறந்து உள்ளே நுழைந்தவள்" கவி! வந்துட்டியாடி! மணி ஏழரையாச்சு! ஏன் இவ்வளவு லேட்டு?"என அம்மா கேட்க ...

" கவர்னர் உத்தியோகம் பார்க்கிறேன் பாரு! வேலை முடிஞ்சதும் கார் தயாராக இருக்கும் ஏறி.. வீடு வந்து சேர ..."எரிச்சலோடு சிரித்தாள்.

"மாத்திரை வாங்கிட்டு வந்துட்டியாடி? அம்மா கேட்க...

ஒரு நாள் மாத்திரை சாப்பிடலைன்னா ஒன்னும் ஆயிடாது மா.. வந்து உள்ளே நுழையும் முன்னயே தொடங்கிட்டியே" என கோபமாக கூறியவள், ஹேண்ட் பேக்கை தூக்கி வீசிவிட்டு, தொப்பென நாற்காலியில் உட்கார்ந்தாள்.

வீட்டிலும் முகமூடி அணிய முடியாது... பொய் முகம் கொண்டு பொறுமையாக பேச முடியாது... என்ற நிதர்சனம் புரிய, அலுப்போடு வேலைகளை செய்ய ஆரம்பித்தாள் கவிதா.



● நரேன்

# அடையாளக்குரல்

குரலற்றவர்களின்*
குரல்வளையை
ஆதிக்கம்
அழுத்திய போதெல்லாம்
முச்சந்தி
மேடைகளில்
குரல்
எழுப்பியே
மீண்டெழுந்தோம்

*கும்புடுறேன் சாமி*
கக்கத்தில் துண்டு
கையிரண்டில்
செருப்பு
வெறுங்காலில்
குத்திய
முட்களும்
சிந்திய
ரத்தத் தீட்டுக்கும்
ஆதரவு
குரல் மருந்திட்டே
உயிர் மீட்சி
பெற்றோம்

*இழப்பதற்கு*
*ஏதுமில்லை*
*உயிரைத்தவிர*
வியர்வை
நாளங்களில்
குருதி நதியோட
உழைத்தே
ஓடாக
தோழமை
குரல் தந்த
பிராணவளியாலே
உயிர்த்திருக்கிறோம்.

*கருவிழி*
*கைவிரல் ரேகை*
அடையாள
ஆதாரமான
தேசத்தில்
எங்கெல்லாம்
ஒடுக்கப்பட்டோர்
குரல் ஓங்கி ஒற்றுமையாய்
ஒலிக்கிறதோ
அங்கெல்லாம்
அடையாளக்குரல்கள்
மீட்டெடுக்கப்படுகின்றன.

அடையாளமற்றவர்களின்
*அடையாளம்* அடையாளப்படுத்தும்
வரை
*இக்குரல்களை*
அலட்சியப்படுத்தல்
இயலாது.



● மகிழை.சிவகார்த்தி

# “துளிப்பாக்கள்”

பேருந்தில் காத்திருக்கிறார்கள்
புறப்பட தயாராய் இருக்கிறது
புதியதோர் அனுபவம்!

விளையாட்டுத் திடல்
இரு அணிகளாக மோதுகிறார்கள்
எதிர்க்கட்சிகள் கூட்டம்!

புணரமைக்கப்பட்ட சாலை
வேகமாக கடந்து செல்கிறார்கள்
கையேந்தும் பிச்சைக்காரர்கள்!

பள்ளியறையில் ஆசிரியர்
பாடம் கற்றுக் கொள்கிறார்
முதலிரவு!

மரத்தில் தேன்கூடு
சேமித்து வைக்கப்பட்டு இருக்கிறது
அயராத உழைப்பு!

கோடை காலம்
முகம் சிவந்து இருக்கிறது
அதிகாலை சூரியன்!

குயில் கூவுகிறது
உச்சி கிளையில் அமர்ந்து
இலையொன்று உதிர்கிறது!

மின் கம்பி
ஆந்தை அமர்ந்திருக்கிறது
பயத்தில் அலரும் குழந்தை!

சிறப்பு நாள்
கோவிலுக்குள் பக்தர்கள் கூட்டம்
தொடர் அன்னதானம்!


கட்டணப் பேருந்து
இலவசமாய் ஒரு கண்காட்சி
பறக்கும் வண்ணத்துப்பூச்சி!



## • கோவை சசிகுமார்

தீர்மானங்கள் எதுமற்ற
சூழலில்
கவிதைக்குள் புகுந்துவிட்டுச்
செல்ல மறுக்கும்
சொற்களுக்குள்
கட்டுண்டு கிடக்கின்றேன்
மௌனத்தின் குமுறலில்
எதை எதையோ மென்று
விழுங்கும்போது
வெளியேறும்
உமிழ்நீர் என்சைம்கள் (நொதிகள்)
எச்சிலாய்
வீணாகிப்போகின்றன
சில நேரங்களில்
கதறிக் கிழிக்கின்ற
சொற்களால்
கசக்கி வீசுகையில்
நிறையும் குப்பைத்தொட்டியில்
நெளியும் காகிதங்கள்
இன்னும்
நீ தெளியவில்லையென
கொக்கரித்து நகைக்கும்போது
ஆதங்கத்தோடு பிறக்கிறது
மீண்டுமொரு கவிதை.....

● செ.புனிதஜோதி, சென்னை



# பெண்அரிமா

“அம்மா... ருக்குமணியம்மா... ருக்குமணியம்மா”...என்று சுசீலா பதற்றத்தோடு ருக்மணியம்மா வீட்டைத் தட்டினாள்.

ருக்மணி அம்மா சுசிலாவின் பக்கத்து வீடு.

எப்போதும் யார் உதவி என்று கேட்டாலும் தட்டாமல் செய்யக்கூடியவள். மகள்கள், மகன்கள், கணவர் நல்ல உயர் பதவில் இருப்பவர்கள்.

நல்ல செல்வசெழிப்பில் இருக்க கூடியவள். ஒருநாளும்

எவரிடமும் காட்டிக்கொள்ளாத பெருதன்மையான, தயாளக் குணம். அதனாலே ருக்குமணியம்மாவை எல்லோருக்கும் பிடிக்கும்.

சுசிலாவின் கணவர் பாலு. இந்தியன் வங்கியில் பணிபுரியும் அலுவலர். சென்னையிலிருந்து மாறுதலாகி சாத்தூர் வந்து சேர்ந்து ஆறு மாதம்தான் ஆகுகிறது. இந்த சமயத்தில்தான் இப்படியானவொரு நிகழ்வு .

வேகமாக கதவைத் திறந்த ருக்மணியம்மா. “என்னம்மா சுசிலா இந்த நேரத்துல” என்று கேட்க...

“அத்தை தண்ணி கேட்டுச்சு தண்ணீர் எடுத்து வந்து தரதுக்குள்ள பேச்சு மூச்சு எதுவும் இல்லாம கிடக்குது. கொஞ்சம் வந்துஎன்னனு பாருங்க அம்மா... அவரு வேற ஆபிஸ் விசயமா வெளியூரு போயிருக்காரு”... படபடப்போடு

அழுதுகொண்டே சுசீலா சொல்லி முடித்தாள்.

உடனே கிளம்பிய ருக்மணியம்மா

“பர்வதக்கா... பர்வதக்கா...என்று கூப்பிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தாள்.

கன்னத்தை தட்டித்தட்டி அழைத்து பார்த்தும்... ,தண்ணீர் தெளித்து பார்த்தும்,. கடைசியாக நாடியைப் பிடித்தப்படியே ...

“சுசீலா.. பாலு தம்பிக்கு போன் போட்டு கொடு என்றாள்”.... “என்னம்மாச்சு என்று பரிதவிப்போடு கேட்டாள்.”

ஒன்றுமில்லை டா...என்று மெதுவாக விசயத்தை சொல்லி தேற்றினாள். அதிகாலை என்பதால் பாலு அழைப்பை எடுக்க தாமதம் செய்தான்.

அதற்குள் ருக்குமணியம்மா அவருக்கு தெரிந்த டாக்டருக்கு போன் போட்டு விசயத்தை சொல்லி .

“நாங்க வரவா சார்?

என்று கேட்க..”

வேண்டாம்மா நானே வருகிறேன்...

என்று ராமசாமி டாக்டர் கூறி முடித்தவுடன்.

பாலு லைனுக்கு வந்தான்.

சுசீலா அழுதுக்கொண்டே விசயத்தை சொல்ல, ருக்குமணியம்மாவிடம்

போனை கொடு என்றான்.

“என் அனுபவத்தில் உயிர் பிரிஞ்சிடுச்சுப்பா... இருந்தாலும்

ராமசாமிடாக்டர வரசொல்லியிருக்கு... அவர் வந்து ஒருபார்வ பாத்து சொல்லட்டுப்பா..

நீங்களும் கௌம்பி வாங்க என்று போனை துண்டித்தாள்.

சுசீலாஅழுகஆரம்பித்தாள்.

அழுகாதடா என்று சமாதானப்படுத்தினாள்.

“எனக்கு என்ன செய்யனும்கூட

தெரியாதே... என்றே புலம்பினாள்...

நீ எதுக்கும் கவலைப்படாத நாங்க

பாத்துக்கிறோம் என்றாள்.

டாக்டர் வந்து பார்த்து

உறுதிசெய்த பின் தகவல் பாலுவிடம்

சொல்லப்பட்டது.

“சுசீலா ..நீ ..உங்க சொந்தபந்தத்துக்கு தகவல் சொல்லும்மா..என்று சொல்லிக்கொண்டே அக்கம்பக்கம் உள்ளவர்களை அழைத்தார் ருக்குமணியம்மா.

ஏ ...பாப்பா..ஏ.. சுப்பு...ஏம்மா..ராமலட்சுமி...கல்யாணி அக்கா.என்று.எல்லோரையும் அழைத்து சொல்ல .எல்லோரும் சுசீலாவின் வீட்டிற்குள் நுழைந்தனர்.

ருக்குமணியம்மா பந்தல்,சேர்,மேளம்,கொட்டு

இவற்றிக்கெல்லாம் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்.

எல்லோரும் சேர்ந்து பர்வதம்மாவை குளியலறைக்குள் தூக்கிகொண்டு போய் குளிப்பாட்டினார்கள்.

“சுசீலா..நல்ல பட்டுசீலையிருந்தா கொடும்மா..என்றாள்

இந்தாம்மா.. இது உயிர்போன சீல

இத வைச்சுத்தான் சாமி கும்பிடனும் பத்திரமா வை... என்று கொடுத்தாள்.

இறந்த பர்வதம்மாவுக்கு பட்டுசேலையைக் கட்டிவிட்டு,வெள்ளத்துணியக் கிழிச்சு தலையையும், நாடியையும் சேர்த்துக்கட்டி,கால் பெருவிரல் இரண்டையும்,கை பெருவிரல் இரண்டையும் சேர்த்துக் கட்டி,நெற்றில் திருநீரைப்பூசி சந்தனத்தை வைத்து அதன்மேல் நெற்றிக்காச ஒட்டி, நாசியில் பஞ்சை வைத்து நடு கூடத்தில் நாற்காலியில் கம்பீரமாக அமர வைத்துவிட்டனர்.

அதற்குள் ருக்குமணியம்மாவின் கணவர் ரோசாமாலை,பத்திக்குச்சி,நெல்,தேங்காய்,வாழைப்பழம் ,வெற்றிலை வாங்கிவந்து தர.

பர்வதம்மாளுக்கு மாலையைபோட்டுவிட்டு, அருகில் பலகைப்போட்டு நாழியில் நெல்லைக்குவித்து அதன்மேல் நெற காமாட்சி விளக்கை வைத்து

தேங்காய் உடைத்து ,வாழைப்பழம்,வெற்றிலை எல்லாம் வைத்துவிட்டு.

“சுசீலா... இரண்டு நெற செம்பு தண்ணீர்கொண்டு வாம்மா...

என்று கூற...

அவளும் கொண்டுவந்து தந்தாள்.

அருகில் வைத்து பத்திகுச்சியை பொருத்தி சாமியாக கும்பிட்டனர்

பர்வதம்மாவை.

பாப்பா...இந்த பச்சரிசிமாவில் பச்சையா மாவிளக்கு போட்டு கொண்டுவாங்கம்மா...மோட்ச விளக்கு வைப்போமென்றாள்.

ருக்குமணியம்மா, சொல்ல,சொல்ல.. பணிகள் வேகமாக நடந்தேறியது. அதற்குள்

பந்தல் போடும் பணியும் நடந்து முடிந்தது. மேளம் அடிப்பவன்,சேர் போடுபவன் வந்து சேர்ந்தனர். பாலுவின் உறவினர்கள் ஒவ்வொருவராய் வந்து சேர்ந்தனர்.

ருக்குமணியம்மா வீட்டிலிருந்து டீ போட்டுக்கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

.ஏ..ருக்குமணியக்கா மாவிளக்கு போட்டாச்சு எங்க வைக்க என்று கேட்டவுடன் நெற செம்பு தண்ணீ மேலே தட்ட போட்டு அதன்மேலே

வைச்சு சுசீலாவ விளக்கேத்த சொல்லுங்கம்மா என்று சொல்லிக்கொண்டேயிருக்கையில்...

ஏக்கா...

ருக்மணியக்கா...

மார் தட்டுறவங்கள

வரச்சொல்லுவோமே...

ஆமாம் கல்யாணியக்கா..

மறந்தே போயிட்டேன் என்று சொல்லிக்கொண்டே போன் போட்டு பேசிய பத்துநிமிடத்தில் அவர்களும் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் வந்தபிறகுதான் எழவு வீடு மாதிரி இருந்துச்சு. அப்படிவொரு பாட்டு,வந்தவங்க எல்லோரும் மெச்சி போனாங்க.அவர்களின் ஒப்பாரியை கேட்டால் கல் மனசுக்காரிக்கும் கண்ணீர் வந்துரும்.

நாலு பொம்பளைங்க கைகோர்த்துக்கிட்டு இறந்த அம்மாவின் அருமபெருமையெல்லாம் பாடுவதும்... இடையில் ஆங்..ஆங் சத்தத்தை எழுப்புவதும்,மார்தட்டுவதும், சீலைய மூடிக்கிட்டு அழுவதைப்போல் அவர்கள் செய்வது நாடகமாக இருந்தாலும்

அதுதான் நம் பராம்பரிய ஒப்பாரிக்கலை .

பாடலை இப்படித்தான் தொடங்கினார்கள்...

“யேன் சீனிக்கருப்பட்டி...
எந்த சில்வண்டு கடிச்சுச்சோ..
கடிச்சுச்சோ...
மாயமா போனதென்ன...
மயானத்த தொணைக்கு... அழைச்சது என்ன...
ஆங்...ஆங்...
பத்துஊரு வந்தாளும்
ஒத்தைய நின்னு
படியளந்து போடுவாயே
போடுவாயே...போடுவாயே...
ஆங்....ஆங்...
எந்த கண்ணு பட்டுச்சோ
சொல்லாம போனதென்ன
போனதென்ன...
ஓம் மக்க வாடுதம்மா...
வாடுதம்மா...வாடுதம்மா...
பெத்தஅம்மா நீயிருக்க
பயமும் ஒண்ணு தோணலையே..
ஏ..ஏ...
பக்க தூண நீ தானே
நீ தானே...
ஒம்ம மக்ககளுக்கு
பக்க தொண
நீ தானே.நீ...தானே
ஆங்...ஆங்...
இப்படியாக பாடல் சென்றது.

ஊரிலிருந்து பாலு மற்றும் பாலுவின் உடன்பிறப்புகள் சுசீலாவின் உறவினர்கள் எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டனர். மகள்களின் அழுகை இதயத்தை கிழித்தெடுத்தது.

வந்தவர்களுக்கு,சாப்பாடு கடையில் வாங்கி தயாராகவைத்திருந்தனர்.

எல்லோரையும்

சாப்பிட வரச்சொல்லி அழைத்துக்கொண்டிருந்தனர்.

சுசீலாவிற்கும் நடு நடுவே

எதையாவது தந்துகொண்டிருந்தனர்.

அங்கிருந்த பாலுவின் உறவினர்

"சம்பந்தக்காரர்கள்,பங்காளிகள்

யாருப்பா மொய் எழுதுவது என்று

கேட்டுக்கொண்டிருந்தார்....

கொட்டும்,மேளமும்ஒருபுறம்,

மார்தட்டஅழுபவர்கள்ஒருபுறம்,

உறவினர்கள் அழுகைஒருபுறம் இதனை வெறிக்க வெறிக்க பார்த்து விளையாடும்

குழந்தைகள் ஒருபுறம் திண்பண்டத்து ஈக்களாய் மொய்த்துக்கிடந்தனர்.

"அடுத்து என்னம்மா செய்யனும்என்று பாலு ருக்குமணியம்மாவை கேட்க... "ஒவ்வொருவருக்கும் ஒரு பழக்கமுண்டு தம்பி. மேட்டுப்பட்டி ஆட்கள் நெற்றியில் காசு வைக்கமாட்டாங்க நாமம் போடுவாங்க, கரும்பு பந்தல் போட்டு திருப்பாவை ஓதி,சங்கு,சேகண்டி ஊதுவாங்க....

"அதெல்லாம் எனக்கு தெரியதம்மா.உங்க முறைப்படியே

செய்யுங்கம்மா...என்று

பாலு சொல்ல... சரிப்பா என்றாள் ருக்குமணியம்மா.

நீர்மாலை எடுக்க யாரெல்லாம் போறாங்க கேளுங்க தம்பி..

மருமகள்கள்,மகள்கள்,பேத்தி,

பேரன்,பையன்கள் போகனும் ஒத்தபடையா போகனும் பா...

சித்தப்பா மக்க,பெரியப்பா மக்க

விருப்பபட்டா எடுக்கலாம் ....

நம்ம தெருவு கடைசியில அடிபம்பு

இருக்கு கூட சம்பந்தக்காரர்கள் போகனும்.அங்க குளிச்சு தண்ணீ

எடுத்துகிட்டு வரணும்... சொல்லிக்கொண்டு இருக்க.

"யக்கா ருக்குமணியக்கா...

" என்ன பாப்பா ..."அக்கா மோட்சவிளக்கு அவிக்கனுமா...

ஆமாம் பாப்பா மக்க,மருமக்க,பேரன்,பேத்தி எடுத்த பர்வதக்காவுக்கு 51 விளக்கு போட்டு பட்டம் சுத்துவோம் என்றாள்.... அந்த வேலையை செய்ய கிளம்பினார்கள்.

உடனே பாலு இது எதுக்கமா... என்று கேட்க .

“நல்லா பிழைச்சவங்களுக்கு பச்சரிசிமாவில் விளக்கு மாதிரி

செஞ்சு அவிச்சு எடுத்து பேரன்,பேத்திக தீபமேற்றி சுற்றிவந்தா நல்லதுப்பா...

ஆன்மா சாந்தியடையும். இதற்கு பேரு மோட்சவிளக்குனு சொல்வாங்க.பட்டம் சுத்திவரதுனு எங்க அம்மா எங்களுக்கு சொல்லிக்கொடுத்தது தம்பி என்றாள்...

நீர்மாலை எடுக்கத் தயாரானார்கள்

பாலுவுடன் பிறந்தது ஒருதம்பி,இரண்டு தங்கைகள், பேரன்,பேத்திகள் சேர்த்து ஒன்பது

சுசீலாவும் கிளம்பினாள்.உடனே

ருக்குமணியம்மா சுசீலா நீ போக கூடாது.... வீட்டுக்கு முத்த மருமகதான் சீதேவி வாங்கனும் அதனால வீட்டிலே குளிச்சு உங்கஅம்மா வீட்டில் சீலை எடுத்திருந்தா அதக் கட்டு இல்லையென ஏதாவதொரு சீலைக்கட்டுமா என்றாள்.

பாலுவின் உறவினர் ஒருத்தர்

மருமகள்கள் நீர்மாலை எடுக்க போகக்கூடாது சொல்ல ஆளாளுக்கு

ஒவ்வொரு முறைகளைச்சொல்லி கூச்சல் போட்டனர்.

உடனே பாலு... சித்தப்பா...

இந்த ஊர் முறைப்படி செய்யிறோம். விடுங்க சித்தப்பா... எனக்கும் தெரியல நீங்களும் சரிவர சொல்ல மாட்றீங்க இப்படியே நம்ம பாரம்பரியம் மறஞ்சுக் கட்டெறும்பா போனதுதான் மிச்சம் என்று சொல்லி வாயை மூட வைத்தான்.

அதற்குள் தெருவில் ஒரு மரப் பெஞ்சைப் போட்டனர் .

வீட்டுக்குளிருந்த பர்வதம்மாவை அனைவரும் தூக்கிக்கொண்டு வந்து பெஞ்சில் கிடத்தினர். வண்ணான் வீட்டுப் பெண்ணும், ஆணும் .முடிவெட்டும் பெண்ணும், ஆணும் மற்ற பணிவிடைகளைச் செய்ய வந்திருந்தனர் .

நீர்மாலை எடுத்த இரத்தபந்தங்கள் பர்வதம்மாவின் தலையில் எண்ணெயும் சீயக்காயும் இடபெறங் கையால் தேய்த்து விட்டு வலம் வந்தனர்.

பர்வதம்மாவின் உடன்பிறந்தவர்கள் சம்மந்த காரர்கள் ,பிள்ளைகள் என அனைவரும் கொண்டுவந்த நீரை ஊற்றினர்.

பிறந்த கோடி , புகுந்த கோடி போடுங்கப்பா என்று சொன்னவுடன் போடப்பட்து.

பர்வதம்மாவிற்கு பிறந்த கோடி சேலையும் புகுந்தகோடிசேலையும் இரண்டையும் சேர்த்து கட்டி விட்டனர். அவருக்கு ரோஜா மாலை போடப்பட்டது .அலங்காரங்கள் செய்யப்பட்டன.

மூத்த மருமக யாருமா உள்ள இருக்குற நெற நாழியையும் காமாட்சி விளக்கையும் தலையில் சுமந்து வந்து மூணு சுத்து சுத்துமா அப்படின்னு சொல்ல...

சுசிலா உடனே அதன்படி செய்யத் தொடங்கினாள்.

“உடனே ருக்மணியம்மா சுசிலா நீயும் பாலு தம்பியும் நாழியை பிடிச்சிக்கிட்டே

“மூதேவி போய்... சீதேவி வா...

அப்படின்னு சொல்லிக்கிட்டே மூணு தடவ சுத்தி வாங்கப்பா..

அப்படியே பர்வத்தம்மா கையில காசக்கொடுத்து முந்தானையில் முடிஞ்சு வைச்சுக்கோ என்றாள்.

அதன்படியே அவர்கள் செய்தனர்.

அடுத்த மருமக யாருமா வாங்க..

சாணி உருண்டையில் தானியங்களை போட்டு வைத்திருந்தனர். அதை பர்வதம்மா கையில்

கொடுத்து வாங்கி அந்த மருமகளிடம் கொடுத்து வீட்டில் உள்ள சுவற்றில் நன்றாக ஒட்டி வைக்கவும் என்று சொன்னார்கள். அவளும் அதன்படி செய்ய உள்ளே புறப்படும்போது...

ருக்மணியம்மா சொன்னாள் நாளைக்கு இதனை முங்கில் தட்டி போட்டு காத்துப்படாத இடத்தில் வைத்து தண்ணீர் தெளித்து வளர்க்கனுமா.கண்ணும் கருத்தா

வளர்க்கனும் நம்ம குடும்பம் நல்லாயிருக்கனுன்னு ஐதீகமென்றாள்.

சரிங்கம்மா என்றாள்.

பேரனை நெய்பந்தம் பிடிக்க வரச்சொல்லுங்கள் என்றவுடன்....பாலுவின் மகன் வந்தான் அவன் கையில் ஒரு குச்சியில் நெருப்பை பற்ற வைத்து மூன்று முறை வலம் வரச் சொன்னார்கள்.

பேத்திமார்கள் மோட்ச விளக்கு எடுங்கள் என்றவுடன்... மாவிளக்கை

எடுத்துக்கொண்டு வந்து பட்டம் சுத்தினார்கள்.

அனைத்து இரத்தபந்தங்களுக்கும்

அம்மாகையில் காசு கொடுத்து வாங்குங்க என்றவுடன் கொடுத்து வாங்கினார்கள்.

இது ஒருபுறம் நடந்து கொண்டிருக்க தேர் அலங்காரம் முடிந்து தயாராக இருந்தது. சங்கு,கொட்டு போன்றவை அடித்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் அழ ஆரம்பித்தார்கள் பாலு மற்றும் தம்பி, மகள்கள் பேத்திகள் தெருக்காரர்கள் என்று

எல்லோரும் அழ ஆரம்பித்தார்கள்.

இடிபோல் அழுகையும்

ஆர்ப்பரிப்பும் கேட்டது.

உறவுகள் புடைசூழ தூக்கிக்கொண்டு தேரில்வைத்தனர்.

அம்மா...அம்மா என்றே அழுதுகொண்டே பெண்கள் பின் சென்றனர். வெடி வெடிக்கப்பட்டது பூக்களைத் தூவிக் கொண்டே சென்றனர்.தெருமுனை தாண்டியதும் பெண்களை அனுப்பி விட்டனர்.

ருக்மணி அம்மா மற்றும் தெருவில் உள்ளவர்கள் வீட்டையும் வாசலையும் கூட்டிப்பெருக்கி தண்ணீர் ஊற்றி அலசி விட்டனர்.

சுசிலா... வாசலில் ஒரு வாளி தண்ணீர் வைச்சுட்டு விளக்கு பொருத்துமா... மயானத்துக்கு போயிட்டு வர்றவங்க காலை கழுவிட்டு நேரா வந்து விளக்கு பார்க்கனும் என்று சொன்னவுடன் .சரிங்கம்மா என்றாள்.

தாய்க்கு தலப்பிள்ள பாலு அவருக்கு தான் மொட்டைப்போட்டு

கொல்லி போடும் உரிமையுண்டு.

பாலுவின் தம்பியின் பெறங்கையிலுள்ள முடி வலிக்கப்பட்டிருந்தது. சிறிது நேரம்

கழித்து மயானத்திலிருந்து

அனைவரும் வந்து சேர்ந்தனர்.

இரவு உணவு முடித்த பிறகு

சுசீலாவின் அப்பா,பாலு,இன்னும்

சில சம்பந்தக்காரர்கள் காலையிலிருந்து ஆன செலவுகளை சொல்லுங்கம்மா இன்னைக்கு சம்பந்தக்காரர்கள்,பங்காளி தான் செலவு செய்யனும் என்று சொல்லிக்கொண்டே வந்த மொய்ப்பணத்தை நீட்டியது மட்டுமல்லாமல் ,நன்றியையும் தெரிவித்து கண்கலங்கி...

நீங்க இல்லாட்டினா சுசிலா தவிச்சு போயிருப்பா என்று கூறினான் பாலு.

பக்கத்திலிருப்பவர்களும்

உறவுகள் தான்ப்பா..என்று

பெருந்தன்மையாய் ருக்குமணியம்மா கூறினாள்.

கணக்கு பார்த்து தரபட்ட பின்

நாளைக்கு என்னம்மா செய்யனும் கேட்டான் பாலு..

நாளைக்கு தீய் ஆத்துவது அல்லது பால் தண்ணீர் தெளிப்பது என்று சொல்வாங்க...

.அரிசி ,பருப்பு காய்கறி உப்பில்லாமல் சமைத்து மண் கலயத்தில் எடுத்து ஒரு வெள்ளைத் துணியால் கட்டிவிடவேண்டும் . ஒரு தாம்பாளத்தில் அம்மாவுக்கு பிடித்த பதார்த்தங்களை வாங்கி வைத்துக்கொண்டு ஒரு இளநிர்,இலை பால், பத்தி சூடம்,வாழைப்பழம் இதெல்லாம் வச்சு ஒரு தாம்பாளத்தில் மேல ஒரு வெள்ளைத் துணியை வைத்து இருக்க கட்டிடணும் . இதை எடுத்துக் கொண்டு போய் வாசலில் வச்சு பிள்ளைக, மருமகள்கள் பேத்திக எல்லோரும் முணு சுத்து சுத்தி மார் தட்டி பாடனும் என்று சொன்னாள்.

பா□வதம்மாவின் மகள்கள் என்ன பாட்டும்மா என்றுகேட்க..

பூசணிக்கா... எங்களுக்கு பூலோகம் .. உங்களுக்கு
கத்தரிக்கா... எங்களுக்கு
கைலாசம்... உங்களுக்கு
வாழக்கா... எங்களுக்கு
வைகுண்டம்..உங்களுக்கு

என்று பாடிக்காட்டினாள்

அதற்கு பிறகு பாலுவும்,தம்பியும் இதனை தூக்கிகிட்டு

திரும்பி பார்க்காமல் மயானத்து போகனும்.

அங்க இலையவிரிச்சு ,

கொண்டு போனதைப் பரப்பி இளநீர் கண்திறந்து சாம்பலில் பால் தெளித்து நீர்தெளித்து

சாமி கும்பிடனும். அந்த மண்கலயத்திலே சாம்பல்,எலும்பு துண்டு இவற்றையெல்லாம் போட்டு வெள்ளத்துணியாலக் கட்டி

ஆறு இருக்கும் பகுதியில கரைச்சுட்டு வரணும். கரைக்கும் போது பாலுதம்பி இடது தோள்பட்டையில் கலயத்த வைச்சுகிட்டு கிழக்கு நோக்கி நின்னு பின்பக்கமாக கலயத்த விடனும்.பிறகு ஆத்துல மூணு முங்கு முங்கி எழுந்து திரும்பிப் பார்க்காம வரணும் என்றாள்...

இங்க எங்க ஆறு இருக்கு பாபநாசத்து தான்

போகனும் என்றவுடன்..

பேத்திஒருத்தி நாளைக்கு பாபநாசத்துக்கு நம்ம எல்லோரும் போகப்போறோமா பாட்டியென்றாள்...

இல்லடா... எங்க முறப்படி பொம்பளைங்க போகமாட்டாங்க

ஆம்பளைங்க தான் போவாங்க.

உடனே பாலு நாளைக்கு நீங்க வரமாட்டிங்களா...என்று பரிதாபத்தோடு கேட்க... அவளுக்கு என்னவோ போல் ஆயிவிட்டது. வரக்கூடாது தம்பி... அப்பா வருவாரு அவருக்கு

எல்லாம் தெரியுமென்றாள்.

பர்வதம்மா பிறந்த வீட்டிலிருந்த ஒருவர் எப்ப காரியம் வச்சுக்கலாம்

என்று கேட்க... ருக்குமணி அம்மாவின் கணவர் பஞ்சாங்கத்தை எடுத்து வந்து பார்த்தார் நாட்களைக் கூட்டி பார்த்து அம்மா நல்ல நாள்ல தான் இறந்திருக்காங்க.அடப்பு இல்லை என்று சொன்னார்.

அடப்பு ...என்றால் ...ஆச்சரியமாக எல்லோரும் கேட்டார்கள். அது ஒன்னும் இல்லப்பா ஜோசியர் வந்து நாள்,நேரம் கணக்குப் பார்த்து மூணு மாசம் அல்லதுஆறு மாசமா சொல்லுவாரு .அப்படி அடப்பில் இறந்தவங்கள தென்னங்கீத்த வாசலில் கட்டி தூக்குவாங்க.மூணு மாசமோஅல்லது,ஆறு மாசமோ வீட்டில் விளக்கு போடனும். அப்படி எதுவுமில்ல நல்ல நேரத்தில் தான் உயிர் போயிருக்கு .

முன்னாடி பதினாறாம் நாள் வைப்போம்....

இப்ப எல்லாரும் வேலைக்கு போற நாள.. ஐந்தாம்நாள் ,ஏழாம்நாள்,பதினொறாம் நாள் வைச்சுகிறாங்க..

என்றாள்.

ருக்மணி அம்மாவின் கணவர் பஞ்சாங்கத்தில் கணக்கு போட்டு பார்த்து 16ஆம் நாள் நல்ல நாளாக இருக்கிறது என்று சொன்னார்.

எல்லோரும் கொஞ்ச நேரத்தில் முணுமுணுத்து ஏதோ கலந்து பேசிக்கொண்டனர். அதன் பிறகு எல்லோரும் சரி என்று ஒப்புதல் அளித்தனர்...

“சுசிலா..

பதினாறாம் நாளில் என்னம்மா செய்ய வேண்டும் என்று கேட்டாள்...

முதலில் பதினாறு நாட்களும் தினமும் சாயந்திரம் விளக்கு ஏற்றி அம்மாவுக்கு பிடித்த பலகாரத்தைப்படைத்து வைத்து கும்பிடனும்மா.....

“16வது நாள் முதல் நாள்....

பொம்மளப் பிள்ளைகளுடைய காசில் ... மொச்ச, தட்டாம் பயிறு, பாசிப்பருப்பு உப்பு இல்லாமல் வேக வைக்கனும் ... பணியாரம், தோசை, இட்லி, உளுந்த வடை ,ஆம வடை அவங்களுக்குப் பிடிச்ச

பலகாரம் ...நெற நாழில் வைத்திருந்த நெல்லை அரச்சு கொண்டு வந்து..

மாவிளக்கு,கொலக்கட்ட அவித்து வைக்கணுமா. இறந்தப்ப கட்டின சீலையை ஒரு பொம்மை மாதிரி செஞ்சு ஒரு பலகையில் அமர்த்தி சந்தனம் குங்குமம் வைத்து குத்துவிளக்கு பொருத்தி தேங்காய் வாழைப்பழம்,நெறசெம்பு தண்ணீ எல்லாம் வச்சு அம்மா வைத்திருந்த சீலையை கீழே விரிச்சு அது மேல மூணு தலைவாழை இலை வைத்து

செஞ்ச பலகாரத்த வைச்சு ... மாவிளக்கின் திரி போட்டு தீபம் போடனுமா. தாய்க்கு தலைமகன்

தகப்பனுக்கு இளையமகன் அதனால அன்னைக்கு தேங்காய் உடைச்சு சாமி கும்பிடவதை தொடங்கி வைக்கனும் பாலுதம்பி என்றாள். ...

அதுக்கப்பறம் எல்லாரும் சாமி கும்பிட்ட பிறகு ஜன்னல் கதவு எல்லாம் சாத்திவிட்டு எல்லோரும் ஒரு பத்து நிமிடம் வெளியே வந்திடனும் . பத்து நிமிஷம் கழிச்சு கதவ திறந்து உள்ளே போகணும் என்றாள்.

எதுக்கு பாட்டி... கதவ அடைக்கணும்... பாலுவின்மகன் கேட்க ...

பாட்டி... வந்து சாப்பிடும் என்றாள் . சாப்பிடுமா? என்று கோரசாக எல்லா குழந்தைகளும் கத்தினார்கள். ஆமாடா... என்று ருக்மணி அம்மாள் கூறினாள்.

அதுக்கப்பறம் என்ன செய்யணும்...

இலையிலுள்ள எல்லா பொருள் களையும் கலந்து எல்லாருக்கும் பகிர்ந்து தர வேண்டும் என்று சொன்னாள்.

மறுநாள் ஐயர வீட்டுக்கு கூப்பிடு பூசைக்கு கொடுக்கணும். பூசை முடிந்த பிறகு சமந்தகாரங்க எல்லாரும் நீர்மால எடுத்தவங்களுக்கு சீயக்காயும் எண்ணெய் தேய்ச்சு விடனும் அவங்க குளிச்சிட்டு வந்த பிறகு அவங்கப் புதுத்துணி, கொடுக்கனும் அத தான் கட்டனும் . அன்னைக்கு கறி சாப்பாடு செலவை சம்பந்தக்காரவங்க ஏத்துக்கனும்.. அதுக்கப்பறம் சாயந்தரம் பிள்ளையார் கோயிலில் சூடம் பொருத்தி கும்பிட்ட பிறகு அவங்க அவங்க ஊருக்கு போகலாம்....என்றாள்

இவ்வளவு சாஸ்திரங்கள் செய்ய கொரானாவிலே செத்து போகலாம்

போல நக்கலாக சொல்ல...

சுல்லெனு கோபம் வந்த ருக்குமணியம்மாவுக்கு அதுக்கு எதுக்கு பிறக்கனும்.

இப்படி பேசியே தான்

நம்ம பாரம்பரியம் ஒண்ணும் தெரியல. நம்ம பிள்ளைகளுக்கு.

வீட்டில ஒருபிள்ளைய வைச்சுகிட்டு அத்த, சித்தப்பா,பெரியப்பா, உறவுமுறையையும் தொலைச்சிட்டு அனாதையா நிக்குதுக.

ஆம் என்றே பெரியவர்கள் தலையாட்டினர்.

அவளின்

சடங்கு முறையெல்லாம் பெண்கள் இழுத்துவந்த ஆணிவேர்என்பது வெட்ட வெளிச்சம் போட்டு காட்டியது.

எல்லோர் மனதிலும் ருக்குமணியம்மா பெண்அரிமாவாகக் காட்சிப்பட்டாள்.

● ச.ஆனந்தகுமார்

# மௌனம்

*கனத்த இருட்டின்*
*அடர்த்தியில்*
*சிக்கிகொண்ட*
*விழிகளாய்..*

*நுனிநெருப்பின்*
*வெம்மையில்*
*கருகி புழுவாய்*
*துடிகிற தோலாய்..*

*நீர்கிலுக்கமற்ற*
*மணல் வனத்தில்*
*தண்ணீருக்குருகும்*
*நாக்காய்..*

*கற்கள் நிரப்பி*
*பாதைகளற்ற*
*மலையுச்சி தொட்ட*
*தேசாந்திரியின்*
*சக்தி தொலைந்த*
*கால்களாய்..*

*விரலிடுக்கில் துவங்கி*
*மணிக்கட்டு வரை*
*வலிகள் சேமித்த*
*நகச்சுத்தியாய்..*

*அறுவை சிகிச்சை*
*முடித்தவுடன்*
*நடக்க முயலும்*
*நிமிடங்களில் நம்பிக்கை*
*துழாவுகிற இதயமாய்..*

*இன்னும் வார்த்தைகளுக்கு*
*அப்பாற்பட்ட*
*வன்முறையாய்..*

*சுழன்று கனக்கிறது..*
*ஊசிமுனையில் நிற்கவைக்கிற*
*உன் ஆழ்கடல் மௌனம்..*



● சிரஞ்சீவி இராஜமோகன்

# புகை மனிதனின் பகை

*பகை வெல்ல வேண்டிய*
*வாழ்க்கையை*
*புகை வெல்ல கூடாது*
*ஆகவில்லை நீயாய்*
*இருந்து பார் ஒரு நாள்*
*தாயாய்*
*கரையான் புற்றினை பாம்பு*
*எடுத்துக்கொள்ளுமாம்*
*கடவுள் நினைத்தாலும் உன்புற்றினை*
*எடுக்க முடியாது*
*புற்று உன் மீது பற்று கொண்டபின் ; நீ*
*பற்று யார் மீதும் வைத்தும் பயனில்லை*
*வேண்டாம் புகை..!*


# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்